# SAINT CECILIA

OR

# THE VIRGIN MARTYR

OFFICE OF THE REGISTRAR
19 MAR 1926
MADRAS

BY

S. SELVARAJU REDDIAR, B.A., L.T.

1346

PUBLISHED BY

**SELVAM & CO.**

CATHOLIC BOOKSELLERS & PUBLISHERS

**480, Silver Street, Saint Thomas' Mount.**

**(MADRAS)**

1926

[*Price As. 6.*

Q6
N26

# அர்ச். செசீலியம்மாள்

அல்லது

## கன்னியர் வேத சாட்சி

OFFICE OF THE REGISTRAR OF
19MAR1926
MADRAS

ஸ்ரீமான்

ச. செல்வராஜு ரெட்டியார், பி. ஏ., எல். டி.

இயற்றியது

செல்வம் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

480, சில்வர்தெரு, பரங்கிமலை

காபிரைட் ரிஜிஸ்டர்ட்] 1926 [விலை அணா 6

PRINTERS

P. R. RAMA IYAR AND CO.

MADRAS

77589

# நூன்முகம்

நீர்மலியுலகி னீசமாந்தர்க்கா
யோர்மலிகுருதி யிந்திரட்சண்யங்
கொண்டுவந்துதவு குமாதேவன்றன்
பண்டறியாத பாமரர்மல்கு
நந்தமிழ்நாட்டு நமரங்களிந்தச்
செந்தமிழ்ச்சரிதை சீருறப்படித்து
மெய்ந்நெறியறிந்து மெய்யனைப்பணிந்
துய்குவரென்னுந் துய்யநோக்கத்தோ
டுயர்குலத்துதித்த வுத்தமநங்கை
துயர்பலமருவு தோகையர்திலகங்
கற்பினைக்கடவுள் காதலர்க்களித்து
மற்புயன்வலேரி யானெனுமனிதன்
மனமின்றிமணந்து மறைவழிகாட்டத்
தனதருங்கற்பைத் தகவொடுகாத்து
மவனருந்தம்பி யதிசயமாகத்
துவமிகும்வழியைத் தொடரவுஞ்செய்த
தோமிலாக்கன்னி துய்யசேசீலி
நாமமார்மங்கை நற்கதைவரைந்தேன.
சத்தியமறைக்குத் துன்னலரனேக
ரித்தரையிருந்த விகல்வலியெழிலார்
ரோமையம்பதியிற் றாமெனுஞ்செருக்காற்
றிரிந்தவர்தம்மைத் திருமறையகத்தே
குருதியைச்சிந்திக் கொணர்ந்தவற்புதத்தை
யிந்தியமக்கள் சந்ததமோத

லேற்புடைத்தாகு மென்பதென்துணிபு.
மாற்பெருமிந்த மாதரின்சரிதை
சத்தியவேத சற்சனர்கொண்டு
பத்தியிலோங்கிப் படிப்பதுமன்றிப்
பிறரையுந்தூண்டிப் பிழையறவாசித்
தறநெறியாரு மணிதிருச்சபையை
யறிந்திடுமாறு சிறந்தநற்சேவை
செய்தனராயின் செல்வன்யானிதனைச்
செய்ததற்குதவுங் கையுறையாகும்.
இந்தநற்கருத்தி னிதுநிறைவேற
எந்தையாம்பரம னிணையடியிறைஞ்சி
நின்றனனறிஞர் நேர்பிழைமன்னித்
தென்றனைப்போற்றி யியல்குணங்கொண்டு
நல்வரவேற்ப ரென்றிதைத்
தொல்புவிவிடுத்தேன் றுகளறமாதோ!

சென்னை,
12-2-1926.

ஆசிரியன்.

# பொருளடக்கம்


| அதிகாரம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திருச்சபையின் வித்து | ... | 1 |
| 2. | காட்டில் மலர்ந்த புஷ்பம் | ... | 8 |
| 3. | மனமில்லா மணம் | ... | 13 |
| 4. | வலேரியான் ஞான தீட்சை | ... | 20 |
| 5. | திபூர்சியஸ் மனந் திரும்புதல் | ... | 27 |
| 6. | வேதத்துக் குயிர் தந்த சகோதரர் | ... | 33 |
| 7. | கன்னிகையின் உன்னத பலி | ... | 42 |
| 8. | அழியாத் திருமேனி | ... | 55 |

# அர்ச். செசீலியம்மாள் சரித்திரம்

## அதிகாரம்—1

### திருச்சபையின் வித்து

வேத சாட்சிகண் மேதகவே சிந்தும்
பூத தேகத்தின் பொங்குமி ரத்தங்காண்
வேத மாமறைக் கேற்றநல் வித்தென
நாத ஞர்சொலெந் நாளினும் பொய்க்குமோ.

நமதாண்டவராகிய சேசுகிறீஸ்து நாதர் இவ்வுலகில் இருக்குங் காலத்தில் மோட்ச ராச்சியம் விதைகளி லெல்லாம் மிகச் சிறிதாகிய கடுகு விதைக்கு நிகரானதென்று சொல்லியிருக்கிருர். ஆனுல் அது முளைத்து வளர்ந்து பெரிய விருக்ஷமானதும், அதன் கிளைகளினூடு ஆகாயத்தில் பறக் கும் பக்ஷிகள் வந்து தங்கிக் கூடுகட்டிச் சந்தோஷமாய் வாழு தற் கிடமாகிறது. நமது கர்த்தர் பிறந்து இரண்டு நூற் ருண்டுகள் கழிந்தபின்னர் சேவரஸ் என்னும் ரோமைய சக்கிரவர்த்தி காலத்தில் கிறீஸ்துவர்களை வதைத்துத் தொந் தரை செய்ய ஆரம்பித்தனர். இதனுல் பெரிய வேதகலா பனை உண்டாயிற்று. இதற்கிடையில் பெத்லகேம் என்னுஞ் சிற்றூரில் மாட்டுக் கொட்டகையில் யாருமற்ற பரதேசி போல் கந்தையாற் பொதிந்து கிடத்தப்பட்டிருந்த சிறு

குழந்தையால் ஸ்தாபிக்கப்பட்ட மோட்சராச்சியம் வளர்ந்து கொண்டே வந்தது. அது வளர்ந்து வந்ததை எவருங் கவனிக்கவில்லை; அப்படி கவனித்தவர்களுக்கும் அது எவ்வாறு எச்சமயத்தில் வளர்ந்ததென்றுந் தெரியாது.

நாம் இந்நூலின்கண் வரையும் சம்பவம் நடந்த காலத்தில் அது எவ்வளவு பெரியதாக வளர்ந்துவிட்டதென்றால், தேர்த்தூலியன் என்னும் வேதசாஸ்திரி சொல்லுமாப்போல், கிறீஸ்துவர்கள் நகரங்களிலும், தீவுகளிலும், கோட்டைகளிலும், கொத்தளங்களிலும், பட்டணங்களிலும், கிராமங்களிலும், அரசவைகளிலும், சேனைகளிலும், அரண்மனையிலும், அவைக்களத்திலும் நிறைந்திருந்தார்கள். பிறமதஸ்தருக்குப் பொய்த் தேவதைகளின் ஆலயங்களே போக்கிடமாயிருந்தன. கிறீஸ்துவர்களின் தொகை எவ்வளவு விர்த்தியாகி இருந்ததென்றால், அவர்கள்யாவரும் ரோமையரின் பகைவரோடு சேர்ந்துகொண்டால், ரோமை இராச்சியத்தை அடியோடு கவிழ்த்து நாசமாக்கி விடலாமாம். அல்லது கிறீஸ்துவர்களெல்லாம் அந்த இராச்சியத்தை விட்டு வெளியேறி வேறு நாடுகளிற் குடிபுகுந்திருப்பார்களேயானால், அங்கே இருந்த அஞ்ஞானிகளின் தொகை எவ்வளவு சொற்பமாயிருக்கும் என்றால், ரோமை இராச்சியம் நிர்மானுஷ்யமான ஒரு வனாந்தரத்தைப் போலாகி, பகைவர் கையில் சுலபமாய்ச் சிக்கி நாசமாய்விடக் கூடுமாம்.

விதைகளிலே சிறியதெனும் விதையாகுங் கடுகுவிதை
அதைநிகர்க்கும் பரலோக நாடென்னு மரியமொழி
சிதைவிலதா யுலகமிசை திருச்சபையுஞ் செழித்தோங்கி
நிதமுறுதல் கண்டீரோ நீணிலத்து மன்பதைகாள்.

அங்கே கிறீஸ்துவர்கள் அதிகமாயிருந்திருப்பரேயாகில், கிறீஸ்துவ நாமத்தைப் பூண்டு வெளிவருவது,

அக்காலத்தில் கலிலேயா நாட்டுச் செம்படவர் சிலரும் மற்றுஞ் சில ஏழை ஜனங்களும் பகிரங்கமாக வெளிவரக் கஷ்டப் பட்டதுபோல், கஷ்டப்பட வேண்டிய தில்லையென்றும், கிறீஸ்துவ நாமத்தைத் தரிப்பது அவமானத்துக் குரிய தல்ல வென்றும் சிலர் நினைப்பது சகஜமே. நாம் குறிப் பிடுங் காலத்தில் பேர்போன தத்துவ சாஸ்திரிகள் கிறீஸ்து வர்களா யிருந்தார்கள் ; சிறப்பு வாய்ந்த உயரிய நூல்கள் கிறீஸ்துவர்களால் வரையப் பட்டன ; பணக்காரரும் பிர புக்களும் பகிரங்கமாய்க் கிறீஸ்துவர்கள் என்று தம்மையே அழைக்க வெட்கப்படவில்லை. இதன் பலனாக இதற்கு முன் செய்ததை விட பிறமதஸ்தர்கள் கிறீஸ்துவர்களோடு அதிகமாய் நெருங்கிப் பழக ஆரம்பித்தார்கள். அஞ்ஞான தத்துவ சாஸ்திரிகள் கிறீஸ்துவர்களைச் சந்தித்து அவர் களோடு தர்க்கஞ் செய்தார்கள். இருவகுப்பாரும் தத் தங் கொள்கைகளை எடுத்துக் காட்டும் நூல்களை வரைந்து வெளியிட்டார்கள். கிறீஸ்துவர்களைப் பற்றியும், அவர் களுடைய வேதக் கொள்கைகளைப் பற்றியும், அவர்க ளுடைய வாழ்க்கை முறையைப் பற்றியும் எங்கே பார்த் தாலும் பேச்சாயிருந்தது. இதனால் கிறீஸ்து மறையை எதிர்த்துப் பகைக்கவோ அல்லது "இரக்ஷண்யத்துக்கு சத்தியமார்க்கம் இது வொன்றே என நாங்கள் அறியோம்" எனச் சாக்குப் போக்குச் சொல்லவோ அஞ்ஞானிகளுக்கு இடமில்லை. ரோமை இராச்சியம் முழுவதும் கிறீஸ்து மார்க்கத்தைத் தழுவுவதற்கென்றே சர்வேசுரன் இவ்வாறு யாவும் நிகழ வேண்டுமெனத் திருச்சித்தங் கொண்டார் என்றாலும் பொருந்தும். ஏனெனில் அடுத்த நூற்றாண்டில் அப்படியேதான் நடந்தது. அக் காலத்து ரோமையர் சரிதையைப் படித்துப் பார்த்தால் நாம் சொல்வதுண்மை யென விளங்கும். அச்சரிதை ருசிகரமானதும் அதிசயம்

நிறைந்ததுமாம். அஞ்ஞானச் சக்கிரவர்த்திகள் தங்கள் சுய யுக்தியாலேயே உண்டாக்கிய சட்டதிட்டங்களும், நாட்டின்மீது அயல் நாட்டுக் காட்டுமிராண்டி ஜனங்கள் படையெடுத்துப் போய்ச் செய்த யுத்தங்களும், யுத்த வீரர் விளைத்த கலகங்களும் சாதாரணமாக நடக்கக் கூடியன என்று சொல்லத்தக்க மற்றும் அநேக சம்பவங்களும் கிறீஸ்துவின் இராச்சியத்தை ஸ்தாபித்து அலகையினுதிக் கத்தை யழிக்கும் தெய்வீக நோக்கம் நிறைவேறும் பொருட்டுக் கடவுள் சித்தத்தாலேயே நிகழ்ந்திருக்கவேண்டு மென்று உறுதியாய்க் கூறலாம்.

ஆனால் நரகப்பிசாசு உலகில் இவ்வாறு கிறீஸ்துவர்கள் தொகை விர்த்தியாவதைச் சும்மா பார்த்துக் கொண்டிருக் குமா? பரலோக இராச்சியம் பரவாம லிருக்க எவ்வளவு அதனால் செய்யக் கூடுமோ அவ்வளவும் செய்யுமன்றோ? திருச்சபையின் இயக்கம் சமாதானத்தில் நிலை கொண்ட தென்று எண்ணியிருக்குஞ் சமயத்தில் நினையாமல் குறி யாமல் திடீரென இதற்குமுன் இருந்ததைவிட மிகக் கொடூர மான வேத கலாபனையை எழுப்பிவிட்டு வேடிக்கை பார்க்கும் அந்நரகப் பேய் சமாதானமாயிருக்குங் காலத்திலும் அது சும்மா விருப்பதில்லை. பிறமதஸ்தர் தங்கள் விக்கிரகாரா தனையைவிட கிறீஸ்துவ வேதம் மிகச் சிறந்ததென்றறிந்து, அதனைத் தழுவ ஆரம்பிக்கையில், அவ்வேதம் ஏகதேசத்தில் நல்ல தென்றாலும், அதன்கண்ணுந் தப்பறைகளிருக்கின் றன என்னும் சந்தேகத்தை மூட்டிவிடும். ஆகவே திருச் சபைக்குட்பட்டு அதன் சத்தியங்களை யெல்லாம் விசுவசிப் பதற்குப் பதிலாக, சிற்சில கொள்கைகளை மாத்திரம் எடுத் துக்கொண்டு ஒரு புதிய வேதத்தை யுண்டுபண்ணி, அவ் வேதம் சத்திய வேதத்திலும் மேலானதென்று சொல்லும் படி ஜனங்களைத் தூண்டிவிடும். அரையுங் குறையுமான

அந்தப் பிரிவினை வேதத்தை ஜனங்கள் விரும்ப ஒரு காரண மிருந்தது. இந்தப் போலி வேதத்தைச் சேர்வதால் யாதொரு சங்கடமுமில்லை. அதற்கு மாறாய்ச் சத்திய வேதத்தைத் தழுவினாலோ கிறீஸ்துவைப் பின் செல்லக் கணக்கற்ற நிந்தை யவமானங்களையும், இன்னல் இடையூறுகளையும் அடையவேண்டி யிருந்தது; இவ்வுலகில் அவர்கள் விரும்புவனவற்றை யெல்லாம் விட்டுவிட வேண்டியிருந்தது.

கனைகட லவனி வாழ்வார் கவலையும் பிணியு மெத்த
வினைகெழு மனித ருய்ய விழைவுறின் செல்வ போகந்
தனைவிடுத் தடியர்க் காவி தந்தநல் கிறீஸ்து தேவை
நினைவகம் பிணித்தன் னார்பின் னேரத ரேகல்நன்றே.

பிரிவினைக்காரர்களாகிய இந்தப் பேர் கிறீஸ்துவர்கள் இன்னும் என்ன செய்தனர் என்றால் கத்தோலிக் சத்தியங்களை யெல்லாம் விசுவசிப்பதுபோல் காட்டிக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றனர். ஆனால் அன்னார் முற்றுமே திருச்சபைக்குப் படியாமலும் தங்கள் முழு மனதுடன் கிறீஸ்துவை நேசித்துச் சேவை செய்யத் தம்மை முற்றுமே ஒப்புக்கொடாமலும் இருந்தபடியால், அவர்கள் விரைவில் பதித மார்க்கத்தில் விழுந்து, தேவத் திரவியானுமானங்களின் அருட்பிரசாதத்தைப் பெறாத அஞ்ஞானிகளிலும் கேடுகெட்டவர்களாய் நிர்ப்பாக்கிய நிலைமையில் இருந்து வந்தனர்.

இவ்வாறு கிறீஸ்துவ மதத்தை வியந்து பேசி, தம் மனதுக்குப் பிடித்தவைகளை மட்டும் விசுவசித்தவர்களில் ரோமையை யாண்டுவந்த அலக்சாந்தர் சேவரஸ் என்னுஞ் சக்கிரவர்த்தி யொருவன். அவனுக்குக் கல்வி பயிற்சி தந்தவள் அவன் மாதாவாகிய மம்மேயியா என்னும் இராக்கினி

யாவள். அவள் கடவுளையும், வேத விசுவாசத்தையும் எவ்வளவு நினைத்துச் சங்கை செய்து வந்தனளென்றால், சிலர் அவள் கிறீஸ்து மார்க்கத்தில் சேர்ந்தவளென நம்பினார்கள். அவள் அந்தியோக்கியா பட்டணத்துக்குப் போயிருந்த போது, ஒரிகன் என்பவரை அலக் சாந்திரியா பட்டணத்திலிருந்து தன்னை வந்து காணும்படி அழைத்திருந்தாள். அப்படியே அவர் அந்த இராக்கினியைப் பார்க்க வந்தார். அவளும் அவரை மிக்க மரியாதையுடன் வரவேற்றுபசரித்தாள். ஆயினும் அவரை வரவழைத்தது அவருடைய சமத்காரமுடைய சல்லாபங்களைக் கேட்டானந்திக்கவே யொழிய, இரட்சண்யமடைய என்ன செய்ய வேண்டும் மென அவரிடங் கேட்டுத் தெரிந்துகொள்வதற்கல்ல வென்றும், ஆகவே அவள் மெய்யாகவே மனந்திரும்ப வில்லை யென்றும் யூகிக்க இட மிருக்கிறது.

அவளுடைய குமாரன் செவரஸ் நல்ல மனதுடையவன். அவன் பிறமதஸ்தனா யிருந்தபோதிலும், மத விஷயங்களைக் குறித்துப் பெரிதும் ஆராய்ச்சி செய்தான். தினந் தோறுங் கொஞ்சநேர மாவது மத விசாரணை செய்வது வழக்கமாம். அவன் ஒரு பிரத்தியேகமான அறையில் நமதாண்டவரின் சுரூபத்தை வைத்துக்கொண்டு மிருந்தானும். ஆனால் அதன் பக்கத்தில் அஞ்ஞான தேவதைகளின் விக்கிரகங்களையும் முற்காலத்தில் வசித்த பெரியாரின் உருவச் சிலைகளையும் வைத்திருந்ததைக் கொண்டே அவன் சேசுநாதரை அஞ்ஞான தெய்வங்களுக்கும் மனிதரில் சிறந்த பெரியாருக்கும் சமமாகவே பாவித்தானெனத் தெரிகிறது. இதனால் அவன் கிறீஸ்துவ னல்லவென்றும், பரலோக பூலோக இறைவனாகிய ஒரே கடவுளிருக்கிறார் என்னும் உண்மையில் அவனுக்கு நம்பிக்கை யில்லையென்றும் நன்கு விளங்குகிறது.

செவரஸ் சக்கிரவர்த்தி கிறீஸ்து வேதத்தின்மட்டில் நல்லபிப்பிராயங் கொண்டவனேனும், பலவீனன், திடமன துடையவனல்ல. கிறீஸ்துவர்களைப் பகைத்த அவனுடைய உத்தியோகஸ்தரில் அனேகர் தங்கள் எஜமானனுடைய பல வீன குணத்தை நன்கறிந்து, கிறீஸ்துவர்களுக்கு விரோத மாக உண்டாக்கப்பட்ட பண்டைய சட்ட திட்டங்களை யமுலுக்குக் கொண்டுவந்தார்கள். சக்கிரவர்த்தியோ அச் சட்டங்களை யழித்துவிட யாதொரு முயற்சியுஞ் செய்ய வில்லை. அந்த உத்தியோகஸ்தரில் ஒருவன் தூர்சியஸ் அல் மாக்கியஸ் என்பான். அவன் ரோமைக் கதிகாரி. சக்கிர வர்த்தி ஊரிலில்லாத சமயம் பார்த்து ஒரு வேத கலாபனை யை எழுப்பிவிட்டுக் கிறீஸ்துவர்களை வதைத்தான். அந்தக் கலாபனையில் மாண்டு மடிந்தவர்களின் தொகை ஐயாயிரம் என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு மரணமடைந்த வேத சாட்சிகளில் முக்கியமானவர்கள் பாப்பானவராகிய அர்ச். ஊர்பானுஸ், கன்னியர் வேத சாட்சிகளில் மிகுந்த மகிமை பூண்டவளாகிய அர்ச். செசீலியம்மாள், அவள் கணவர் அர்ச். வலேரியான், மைத்துனர் அர்ச். திபூர்சி யஸ் என்பவர்களே.

இவர்களில் ஒருத்தியாகிய நமது சரிதை நாயகியின் வரலாற்றை யெழுத ஆரம்பிப்போம். அதன் கண் உத் தமக் கிறீஸ்துவர்களிட மிருக்கவேண்டிய சற்குணநிசயங் களைத் தெளிவாய்க் காணலாம். வேத விசுவாசம் உயிரினுஞ் சிறந்ததென்று தெள்ளிதிற் றெரிந்து கொள்ளலாம். மின் னலைப்போல் தோன்றி மறையும் இவ்வுலகத்தின் செல்வ சுக போகங்களுக்காக, நித்திய நிலையில் நிற்பதற்கென் றுண்டாக் கப்பட்ட ஆத்துமாவை யிழப்பதினும் உயிர்துறத்தல் உத்தமம் என்பதின் உண்மை அங்கை நெல்லிக் கனிபோல் இதன் கண் விளங்கும்.

## அதிகாரம்—2

### காட்டில் மலர்ந்த புஷ்பம்

*கானக மலர்ந்த பூவின் கவினறிந் திடுங்கொ லந்தக்*
*கானக வியற்கை தானுங் கதிதருங் கமலப் பாத*
*ஞானகல் யாணி யாகு நம்பரன் மறையை யோரா*
*தானகம் வளர்ந்த சேயத் தனிமல ரொர்த்த தன்றோ !*

செசீலியா என்னு மாது ரோமை நகரில் பிறந்தாள். அவள் பெற்றோர் செல்வமும் சிறப்பும் வாய்ந்த பிரபு வம்சத்தைச் சேர்ந்தவர்கள். அன்னார் அஞ்ஞானிகள். ஆயினும் செசீலியா சிறுவந் துவக்கியே கிறீஸ்துவளாக வளர்ந்து வந்தாள். இதற்குக் காரணமாயிருந்தவர்கள் அவளுடைய கிட்டின உறவினர்களாகிய கிறீஸ்துவர்களோ அல்லது கிறீஸ்து மார்க்கத்தைச் சேர்ந்த செவிலித்தாயோ, ஒன்றும் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. நமக்குத் தெரிந்த தெல்லாம் அப்பெண்மணி கிறீஸ்துவளாகவே வளர்ந்து வர, அவள் கிறீஸ்து வேதத்தைத் தாராளமா யனுசரிப்பதற்கு அவள் பெற்றோர் யாதொரு தடையும் செய்யவில்லை யென்பதே.

செசீலியா புத்தி விவர மறிந்து எந்தக் காரியத்தையும் ஆழ்ந்தாலோசித்துப் பார்க்கும் பருவமடைந்ததும் அவளுடைய உண்மை நிலையை யுணர்ந்தாள். அவளுக்கும் அவளைச் சுற்றியுள்ளவர்க்கும் இருக்கும் மகத்தான வித்தியாசத்தைக் கண்டறிந்தாள். கடைசியாக அந்தப் பெரிய குடும்பத்தில் அவள் தன்னந்தனியளா யிருப்பதை நினைக்க அவளுக்கே பயமாயிருந்தது. இந்த அச்சமுந் திகிலும் அவள் மன அமைதியைக் கெடுத்து அவளைக் கலைக் குள்

ளாக்கின. அவளுக் கெந்நேரமும் இதே சிந்தனை, இதே நினைவு. அந்தப் பெரிய மாளிகையில் அவளைத் தவிர வேறெவரும் அவளுடைய உணர்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்வா ரில்லையே என வருந்தினாள். தனிமை என்னும் நினைவு அவள் மன நிம்மதியைப் பங்கப்படுத்திற்று. அவளுடைய நேசத்தாய்கூட அவள் மனதிலிருக்கும் உணர்ச்சிகளை யறிந்து, மெய்யான சர்வேசுரன், ஆத்துமம், நித்தியம் முதலிய விஷயங்களைப்பற்றி அவள் சொல்ல விரும்புவதைக் கேட்பதற் கில்லையே என்று நினைக்க நினைக்க அவள் மனத்திகில் அதிகரித்தது. ஆயினும் அச்சிறுமி மேற்கூறிய ஞான விஷயங்களை அடிக்கடி சிந்திப்பதைமட்டும் விடவில்லை.

அவள் தன்னோடு விளையாடிக்கொண்டிருக்கும் கூட்டாளிப் பிள்ளைகளை அடிக்கடி விட்டுப் பிரிந்து, தன்னறைக் கோடி கதவைத் தாளிட்டு உள்ளே இருந்த வண்ணம் தனது தனிமையான நிர்க்கதியை நினைத்து வருந்திக் கண்ணீர்விட் டழுவாளாம். கடைசியில் அவள் இருதயத்தில் இந்த உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் தூண்டி யெழுப் பக்காரணமாயிருந்த இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரன் அவளுக்கு ஆறுதலாயிருக்கத் தொடங்கினார். அவளைச் சுற்றிலு மிருப்பவர்களைப்போல் தானில்லாததற்குக் காரணமென்னவென்று அவள் தன்னையே கேட்டுக்கொள்ளுமாறு ஏவினார். சர்வேசுரன் அவளை நேசித்து, அவளைத் தமது சொந்தப் பிள்ளையாகத் தெரிந்தெடுத்து அவளுக்குமட்டுமே தம்மை வெளிப்படுத்தத் திருவுளங்கொண்டதுடன், அவள் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களை அஞ்ஞான அந்தகாரத்திலே கிடந்துழலும்படி விட்டிருப்பதனா லல்லவா அவள் இவ்வாறு தனிமையா யிருக்க நேர்ந்தது? இந்த நினைவு அவளுக்கு ஆறுதலைத் தந்தது; அவள் மனதில் தேவ சிநே

கங் குடிகொண்டது, பேரானந்தம் பொங்கிற்று. இத்தகைய தேவ சிநேகத்தையும் சந்தோஷத்தையும் அவள் இதுகாறும் அனுபவித்தவளல்ல. இவ்வுலகத் தாய்மாரின் நேசத்தைவிடப் பன்மடங் கதிகமான நேசத்துடன் சிநேகிப்பவர் ஒருவர் உண்டென்றும், அவருடைய நித்திய கரங்களின் பேரணைப்புக்குள் வந்து அவருடைய நேசம் நிறைந்த மார்பின்மேல் சிரத்தைச் சாய்த்துக்கொண்டு அவளுடைய இருதயத்தின் அந்தரங்கத்திலுள்ள சந்தோஷ வருத்தங்களையெல்லாம் எடுத்துரைத்து ஆறுதலடையுமாறு அவளையழைக்கிறாரென்றும் ஓர் இனிய குரலொலி அவள் காதில் தொனிப்பது போலிருந்தது.

அது முதல் செசிலியாவின் வாழ்க்கை மாறிவிட்டது. அவளுடைய விளையாட்டுத் தோழியரின் சகவாசத்தை விலக்கினாள். அவள் பெற்றோர் தன்னை மெச்சிப் பேச வேண்டுமென்றாவது அல்லது சிநேகிதர் தன்னைப் புகழ வேண்டுமென்றாவது அவள் ஆசிக்கவில்லை. அவர்கள் புகழ்ந்தாலும் வைதாலும் எல்லாம் ஒன்றே என்னும் மனப்பான்மையுடையவ ளாயினள். அவள் எதிர் காலத்துக்கு வேண்டியவைகளைப்பற்றி யோசனை செய்வதில்லை. மற்றவர்களைப் போல் வருங்காலத்தில் இன்னது செய்தால் நன்மையுண்டாகும், இன்னது செய்தால் பலனில்லை யென்னும் யோசனைக் கிடங் கொடுப்பதேயில்லை. அவள் மனதி லிருந்த யோசனை யொன்றே. அதாவது தேவசித்தம் இன்னதென் றறியவேண்டு மென்பதே. அவளுடைய விருப்பமெல்லாம் சேசுவை நேசித்து அவருடைய சேவையில் தினேதினே விருத்தியடைய வேண்டும் என்பதே. அவள் அடிக்கடிக் கோவிலுக்குச் சென்று, பீடத்துக்குமேல் தொங்கவிட்டிருந்த வெள்ளிப் புராவுக்குள் பூசிதமாய் வைக்கப்பட்டிருந்த தேவ நற்கருணைக்கு முன்னால் முழந்

தாட்படியிட்டு ஜெபத்தியானஞ் செய்வதிற் காலத்தைப் போக்குவாள். அல்லது ஏழைகளையும், நோயாளிகளையும் அவர்கள் வீட்டுக்குப் போய்ச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லியும் அன்ன வஸ்திரம் உதவியும் தனதாண்டவருக்குச் சேவை புரிவாள். மற்ற சமயங்களில் நமதாண்டவரை நன்கறியும் பொருட்டுப் பரிசுத்த சுவிசேஷங்களை எடுத்து வாசிப்பாள். அவள் பெற்ருேர் அவளை யழைக்கும்போது, இந்த நற்கிருத்தியங்களை விட்டுப் போக வேண்டியிருக்கிறதே என வருந்துவாள். சுவிசேஷம் வாசித்துக்கொண்டிருக்கையில் போகவேண்டி யிருந்தால், உயிர்ப்பிச்சை யளிக்கும் அதன் உன்னத வார்த்தைகள் மட்டில் அவளுக் கிருந்த அன்பின் அடையாளமாகவும், அவருடைய ஆவியால் நிரப்பப்பட்டு அவருடைய திருவருளின் வல்லமையால் தான் முற்றுமே மாறிவிடவேண்டு மென்கிற ஆசையி னறிகுறியாகவும் அப்பரிசுத்த நூலை அவளுடைய மார்பகம் வைத்து அன்புடன் அணைத்துக் கொள்வது வழக்கம்.

வேத சாட்சிகளாக மரிப்போம் என்னும் எண்ணம் அக்காலத்திய கிறீஸ்துவர்கள் மனதில் எப்போதும் இருந்தது. ஏனெனில் அவர்களில் பெரும்பான்மையோருடைய உறவினர் அல்லது நண்பரில் யாராவது வேதசாட்சிகளாக மரித்திருப்பார்கள். அவர்களுடைய திருநாள் வரும்போது அவர்கள் கல்லறையிலேயே திருப்பலி பூசைச் சடங்கை நிறைவேற்றுவது வழக்கம். மேலும் வேத கலாபனை திடீரென உண்டாகலாம். எப்போது வரும் என்ருவது, அல்லது அந்த வேதசாட்சிகள் செய்ததுபோல் தாங்களும் வேதத்துக்காகச் சாட்சியங் கூறி இரத்தத்தைச் சிந்தவேண்டிய முறை சீக்கிரம் வருமா வராதா என்ருவது ஒருவருக்கும் நிச்சயமாய்த் தெரியாதல்லவா? எல்லா

கிறீஸ்துவர்களுக்கும் இந் நினைவு மிகுந்த கவலையைத் தரக் கூடியதா யிருந்தது. எல்லோருமே அத்தினத்தை ஓருன்னத நாளாகக் கருதி வந்தனர். ஆனால் செசீலியம்மாளுக்கோ அந் நினைவு நம்பிக்கையையும் சந்தோஷத்தையுங் கொடுத்தது. அப்பெண்மணி தன தன்பார்ந்த ஆண்டவராகிய சேசுகிறீஸ்து நாதருக்கே தன் இருதயத்தை யெல்லாம் ஒப்புக்கொடுத்து விடவில்லையா? அவருடைய அழகின் வனப்பைக் கண்டு காலாகாலத்துக்கும் அதே வேலையாயானந்தித் திருக்கவேண்டு மென்ப தல்லவா அவள் எண்ணம்? அவரைக் காணுமல் இவ்வுலகில் தங்கி யிருக்கும் ஒவ்வொருதினமும் ஒவ்வொரு யுகம்போல் அவளுக்குத்தோன்றவில்லையா? அவள் இன்னும் மங்கைப் பருவம் நீங்காத யௌவன மாது. ஆகவே அவள் இன்னும் எவ்வளவு காலம் காத்துக்கொண் டிருக்கவேண்டுமோ? ஆனால் வேதகலாபனை யொன்றுண்டானால் அவள் சில சமயம் வேத விரோதிகள் கையில் சிக்கி வேதத்துக்காக உயிர்தர நேரினும் நேரலாம். அப்போது நேரே அவரிடம் போய்ச் சேரும் பாக்கியம் கிடைக்குமே. மேலும் அவரை எவ்வாறு சந்தோஷப்படுத்துவ தென்றும், அவருக்குத் தன் அன்பை எவ்வாறு காட்டுவ தென்றும் அவள் சதா நினைத்துக்கொண்டிருக்க,வில்லையா? அவருக்காகத் தன்னுயிரைக் கொடுத்தலேவிட அவள் அவருக்கு வேறென்ன செய்யக் கூடும்? அவளுடைய இருதயத்தின் இரத்தத்தைப் பார்க்கிலும் வேறென்ன விலைமதிக்கக்கூடாத காணிக்கையை அவருக் களித்தற்கூடும்?

# அதிகாரம்—3

## மனமில்லா மணம்

*கற்பதனைக் கத்தனிடங் கையளித்த*
*காரிகையின் கடிம ணத்தை*
*வெற்பதனில் வந்தபிரான் வெறுமணமா*
*யாக்கினதும் விந்தை யன்றோ !*

செசீலியம்மாள் சேசுநாதரை நினைத்துத் தியானஞ் செய்யவும், அவரைப்பற்றி வாசிக்கவும், அவரை நோக்கி ஜெபஞ் செய்யவும், அவருடைய திருச்சித்தத்தின் படியே நடக்கவும், அவருக்காகத் தனது குருதியைச் சிந்தவும் ஆசித்தாளென்றாலும், இவைகள் எல்லாவற்றையும் விட அவள் மிகவாய் நேசித்த விஷயம் ஒன்றுளது. தங்களைத் தவிர வேறேவராலுங் கற்றுக்கொள்ளக் கூடாத ஒரு புதிய கீதத்தைப் பாடிக்கொண்டு செம்மறிப் புரிவை போகுமிட மெல்லாம் அவரைப் பின்பற்றிப் போகும் கன்னியர் கூட்டத்தை மோட்சத்தில் கண்டதாக வேதப் புத்தகத்தில் காட்சி யாகமத்தில் அவள் படித்திருந்தாள். ஓ, தெரிந்து கொள்ளப்பட்ட அக்கன்னியரில் தானும் ஒருத்தியா யிருக்கக் கூடாதா? அவருடைய தூய இருதயத்துக் கருகில் வாசஞ் செய்வோரில் தானும் ஒருத்தியாயிருக்கலாகாதா ? பரிசுத்த வாளருக்கும் கற்புடையோருக்கு மட்டுமே அவர் வெளிப்படுத்துகிற தெய்வீக இரகசியங்களைத் தனக்கும் கற்பிக்கலாகாதா ? இந்த ஆசையும் ஆவலும் அவள் மனதில் ஸ்திரமாய்க் குடிகொண்டு விட்டன. பின்னர் அவள் பேரில் ஆண்டவருக் கிருக்கும் அணை கடந்த நேசத்தாலும், அவர் பேரில் அவளுக் கிருக்கும் அளவற்ற நேசத்தாலும் ஏவப்

பட்டு, என்னதான் கஷ்டங்கள் நேர்ந்தபோதிலும் பூலோக மனிதன் எவனையும் எப்போதுமே மணம் புரியாமல், தமது சிநேகத்தால் அவளிருதயத்தைக் காயப்படுத்தினவரும், மனித குமாரர்களி லெல்லாம் சிறந்த அழகு சௌந்தரியங் கொண்டவருமான ஆண்டவருக்கே தன் கற்பை அர்ப்பணஞ் செய்து அவருக்குப் பிரியமான கன்னி பத்தினியாவதே சரியென்று தனக்குள்ளாகவே பிரதிக்கினை செய்து கொண் டாள்.

ஆனால் அவ்விள நங்கையின் பெற்றோர் அவள் விஷயத் தில் அவ்வாறு நினைக்கவில்லை. அவர்கள் எண்ணமெல்லாம் வேறு விதமாயிருந்தது. செசீலியம்மாள் அகவழகும் முகவழகும் ஒருங்கே அமையப்பெற்ற ஆரணங்கு. அவள் உயர்குலமாது. அவள் பெற்றோர் நல்ல அந்தஸ்துடைய வர்கள். ரோமையில் பிரபலமான பிரபு குலத்தைச் சேர்ந்த வர்கள். ஆகவே அன்னார் தமது மகளை தங்கள் குலத்துக் கும் அந்தஸ்துக்கு மேற்றவாறு மணஞ் செய்வித்துக் கண் குளிரப் பார்த்து மகிழவேண்டுமென்று விரும்பினார்கள். ஆதலால் அவள் விருப்பத்துக்கு மாறாய், அவளை வலேரி யான் என்னும் ஓர் யௌவன பிரபுவுக்கு மணஞ்செய்வதென நிச்சயார்த்தஞ் செய்தார்கள் அவள் பெற்றோர். வலேரி யான் செல்வமுஞ் சிறப்பும் வாய்ந்த குடும்பத்தி லுதித்த வன். செசீலியாவின் குலத்துக்கு எவ்விதத்துந் தாழ்ந்தவ னல்ல. நற்குண நற்செய்கையுடைய வாலிபன். அக்கிரமம் நிறைந்த அக்காலத்தில் அவனைப்போலும் இளைஞர் அகப் படுவ தருமை. ஆனால் அவன் கிறீஸ்துவனல்ல. பொய்த் தேவதைகளை வணங்கும் பிறமதஸ்தன். சேசுகிறீஸ்து நாதரைத் தவிர வேறெந்த நரமனிதனையும் தன் கணவனாகக் கொள்வதில்லையென அவள் வாக்குறுதி செய்துகொண் டிருந்த படியால், வலேரியானை விவாகஞ் செய்யக்கூடாத

வளா யிருப்பதாக அவள் தனது தாய் தந்தையர்க்குச் சொன்னாள். அவள் வார்த்தையை அவர்கள் கேட்கவில்லை.

"பேதைப் பிள்ளாய், நீ பேசுவ தின்னதென் றறியாய். தெரியாத்தனமாக இவ்வாறு பேசுகிறாய். வாக்குறுதியாவது, பிரதிக்கினையாவது? நீ சொல்லுவதெல்லாம் இளமையின் மனோபாவம். நீ வளர்ந்து பெரியவளாகும் போது இதன் தவறுதலை யுணர்வாய். அப்போது நீ வேறுவிதமாகவே நினைத்து வருந்துவாய் என்பது நிச்சயம். ஆகவே புத்தி யில்லாதவள்போல் பேசாதே. நான் சொல்வதைக் கேட்டு அதன்படி நடப்பதே மதி. ஆகவே வீண்சாக்கொன்றுஞ் சொல்லாமல் எங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது உன் கடமையாகும்" என்று அவள் தகப்பனார்சொல்லி அவள் வாயை யடக்கிவிட்டார். பேதை செசீலியா, என்ன செய்வாள் பாவம்! இந்த ஏற்பாட்டினால் அவளுக்குண்டான வருத்தம் இவ்வள வவ்வளவல்ல. அவள் தன் பெற்றோரை நேசித்தவ ளானபடியால் அவர்கள் சொல்லுக்கு விரோதமாய் நடக்க விரும்பவில்லை. ஆயினும் அவளுக்குச் சேசுநாதர்பேரில் அதிக நேசம். அவருக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி நடப்ப தெங்ஙனம்?

கல்யாணத்துக்கு யாவும் சித்தமாயின, கல்யாணத்தைச் சிறப்பாய் நடத்துவதற்காக வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் அவளுடைய பெற்றோரும் உறவினருஞ் செய்துகொண் டிருந்தனர். சுபகாரிய மானபடியால் வீட்டில் எல்லோரும் சந்தோஷமாகவே இருந்தார்கள். எங்கே பார்த்தாலும் உத்சாகமும் குதூகலமுமா யிருந்தன. ஒருவர் முகத்திலாவது கவலைக்குறி காணப்படவில்லை. ஆனால் நமது செசீலியாவோ அப்படியல்ல, கல்யாணஞ் செய்துகொள்ளப் போகும் பெண்களைப்போல் அவள் இல்லை. அவள் தன

தறையில் தனிமையாய் உட்கார்ந்துகொண்டு தன்கதியை நினைத்து விசனப்பட்டுக்கொண் டிருந்தாள். அவள் அப்போது கடவுளையே நம்பியிருந்தாள். அவளுக்கு அச்சமயம் நிகழ விருக்கும் பேராபத்தினின்றும் அவளைக் காப்பாற்றக் கூடியவர்கள் சர்வேசுரனைத் தவிர வேறெவரு மில்லையென நினைத்தாள். அம்மாது முழந்தாட்படியிட்டு அவருடைய அடைக்கலத்தை நாடினாள்.

"ஓ! என் ஆண்டவரே? என் கற்பை யளிக்கும்படிக் கேட்ட தேவ நாயகரே! யான் உமது பத்தினியல்லவா? என் கற்பை உமக்கே தத்தஞ்செய்திருக்க, அதைப் பூலோக மாந்தர் கெடுத்தலாகுமா? கன்னிமை குன்றாத தூயநிலைமையில் யானிருக்க விரும்புகிறேன். என் விருப்பத்தைப் பூர்த்திசெய்வது உமது கடமை. என்றுமே கற்பழியாக் கன்னிகை விரதம் பூண்ட எனக்கிவ்வுலகில் என் விரதத்தைக் காக்க உம்மைவிட உற்றதுணை ஒருவருமில்லையே. ஆண்டவரே, அடியாள்மீது கிருபா கடாட்சமாய்த் திருக்கண்ணோக்கி என் விண்ணப்பத்தைக் கேட்டருளும். என் கற்புக்கு நேரவிருக்கும் இந்த விபத்தை விலக்குவீரென்று உம்மையே நம்பியிருக்கிறேன்.

மாசணுவு மருவாத மங்கை நீயே
மாபரனை யுதாமுற வைத்தாய் நீயே
ஈசனிடங் கற்பளித்து மகிழ்ந்தாய் நீயே
எழில்கற்பை யுயிரெனவே மதித்தாய்நீயே
நேசமுடன் கற்பழியாக் கன்னி யாக
நினைக்குநரைக் காக்குமுயர் வேலி நீயே
நீசவடி யாளெனது கற்பி னுக்கே
நேர்விபத்தை நீக்கியெனை யாண்டு கொள்ளே.

அர்ச். மரியாயே! முப்போதுங் கன்னி மகிமை குன்றாத கற்பரசியே! கன்னியர்க் கெல்லாம் இராக்கினியே!

கற்பின் மகத்துவத்தை நீர் நன்கறிவீரே! நான் உமது பிள்ளையல்லவோ? கற்பைக் காக்க விரும்பும் அடியாளைக் காத்தாட்கொள்வது உமக்கோர் பொருட்டல்லவே. என் மீது கிருபை கூர்ந்து எனக்காக உமது நேசக் குமாரனை மன்றாடி இந்த விபத்தை நீக்க எனக்குதவியாய் வாரும். வான தூதரே, மோட்ச லோகத்தில் வசிக்கும் புண்ணிய சீலரே, கன்னியரே, வேதசாட்சிகளே, எல்லோரும் என் பாரிதாபகரமான நிலைமையைப் பார்த்திரங்கி எனக்காக நமதாண்டவரைப் பார்த்து மன்றாடும்" என்று அச்சிறுமி கண்ணீருங் கம்பலையுமாய்ப் பிரார்த்தித்தாள்.

அவளுடைய கருத்து நிறைவேறி இந்தச் சங்கடம் அவளைவிட்டு விலகவேண்டு மென இரண்டு தினங்கள், சில சமயத்தில் மூன்று தினங்கள் அன்ன ஆகாரமின்றி உபவாச மிருந்தாள். சாட்டையால் அடித்துக்கொண்டும், தேகத்தில் முரட்டு ரோமத்தா லியன்ற சட்டையைத் தரித்துக் கொண்டும் சரீரத்தைத் துன்பப்படுத்தினள். இரவும் பகலும் இடைவிடாமல் ஜெபித்தவண்ணமிருந்தாள். முகூர்த்த நாள் நெருங்க நெருங்க அவள் ஜெபதபங்களும் அதிகரித்தன. சர்வேசுரன் தம்மை யழைப்பவர்க ளருகில் எப்போது மிருக்கிறர் என்ப துண்மையிலு முண்மை. அவருடைய பிரிய மகளை ஆறுதலின்றித் தனிமையில் விட்டிருக்க அவருக்கு மனம் வருமா?

தம்மை யண்டிய தாசரை யண்மியே
மம்ம ரறுக்கு மருந்தெனு மாபரன்
செம்மை யுற்றிடர் தேயவ ரந்தரும்
அம்ம வீதுமெய் யாதரை மீதிலே.

அவள் நம்பிக்கையெல்லாம் இழந்து துக்க சாகரத்திலமிழ்ந்தி வேதனைப் படுகையில், நம தாண்டவர் அவள் ஆத்துமத்

துக்கு இனிய ஆறுதலையளிக்கச் சித்தமானார். அவளுடைய பரிசுத்த விரதத்தையவர் ஏற்றுக்கொண்டதாகவும், தமக்கே யுரிய கன்னி பத்தினியாக அவள் இருக்க வேண்டுமென் பதே அவர் திருச்சித்தமென்றும், அதற்கடையாளமாக அவளுக்குக் காவலாகத் தமது வான தூதரில் ஒருவரை யனுப்பியிருப்பதாகவும் சர்வேசுரன் அவளுக்கு வெளிப் படுத்தினார். ஆயினும் அவள் துன்ப வருத்தங்களென்னுஞ் சிலுவையைச் சுமக்காமல் மோட்ச முடியைப் பெறலாம் என்று நினைப்பதில் பயனில்லையென்றும், அவள் அவரு டைய கன்னி பத்தினியாகவிருக்க மெய்யாகவே விரும்பி னால், உலக மாந்தர்க் கஞ்சுவதை விட்டொழித்துத் தைரிய மாய் உலகப் போரிற் கலந்துகொண்டு, அவசியமானால் அவ ளுடைய இரத்தத்தையுஞ் சிந்த வேண்டும் என்றும் சொன் னார். இவை அவளுக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தன.

கடைசியாகக் கல்யாண தினம் வந்தது. செசீலியாவை நவமணி யிழைத்த பொன் னாபரணங்களாலும் விலை யுயர்ந்த பட்டாடைகளாலும் வெகு சிறப்பா யலங்கரித் தார்கள். அவளுக்கிருந்த இயற்கை வனப்புடன் செயற் கை வனப்புஞ் சேர்ந்தமையால் அவள் வனப்பு இருமடங்கு பிரகாசத்துடன் கண்டோர் மனதைக் கவரும் பான்மை யதாய் விளங்கிற்று. குடும்ப நிலைமைக் கேற்றவாறு அவளுடைய விவாகம் மிகுந்த ஆடம்பரமாகவுஞ் சிறப் பாகவும் நடந்தேறியது. அஞ்ஞான சடங்குகளை யனு சரித்தே விவாகத்தை நடத்தினர். கல்யாணம் பெண் வீட்டில் நிகழ்ந்தமையால் அக்கால வழக்கத்தின்படி அன்று மாலை யிருட்டியதும் மணமகனையும் மணமகளையும் வாத்திய கோஷத்துடனும் வாண மத்தாப்புடனும் வெகு நேர்த்தியா யலங்கரிக்கப்பட்ட சிங்கார ரதத்தில் ஊர்வல மாக மாப்பிள்ளை வீட்டுக் கழைத்துப் போயினர்.

நமது பெண்மணி கல்யாணச் சடங்கின்போது கட்டாய மிருந்தே தீர வேண்டியிருந்தது. அவள் மாட்டேன் என்றால் அவளைவிடப் போகிறதில்லையென் றவட்குத் தெரியும். ஆகவே அந்தச் சடங்குக ளிடையில் அமர்ந்து அவற்றில் கலந்துகொண்டவள்போல் அவ ளிருந்தபோதிலும், அவள் இருதயம் அவற்றை வெறுத்தது. அவளணிந் திருந்த உயர்ந்த பீதாம்பரத்தின் கீழ் கூரிய ஆணிகள் பதியப்பெற்ற மயிர்ச் சட்டையைச் சரீரத்தில் படும்படியாகத் தரித்திருந்தாள். அஞ்ஞான சடங்குகள் நடக்கையில் அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டு, அவள் தன் மோட்ச மணவாளனுக் களித்த வாக்குத்தத்தத்தை மீண்டும் உச்சரித்துப் புதுப்பித்தாள். அவள் ஊர்வலமாய்ப் போகையில் பாடகர் பாடிய கீர்த்தனைகளின் ஓசையும், மேளவாத்திய கோஷமும் எங்கும் நிறைந்திருந்தபோது, அவள் தன்னிருதயத்திலேயே மோட்சத்தில் வான தூதர் பாடும் பின்வருங் கீதத்தைப் பாடிக்கொண்டே சென்றாள்.

ஆண்டவனே கர்த்தாவே அடியாள்மீதில்
அருள் கூர்ந்தென் னுகமதி லாத்துமத்தில்
மாண்டபரி சுத்தமெனும் பாக்கியத்தை
மகிமையுறக் காத்தருள வேண்டு மையா
காண்டரிய வுனதடியை நம்பி வந்தேன்
காரிகை யென்னுள்ளத்தில் குழப்ப மேவ
வேண்டினேன் செய்யலெனத் தூய்மை நாடி
வேதமுறை மூலனெனும் விமல தேவே.

“என்னைச் சரீரத்திலும் ஆத்துமத்திலும் மாசில்லாமல் தூய்மையாய் வைத்துக் காரும். ஓ ஆண்டவரே, உம்மிலேயே நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். நான் குழப்பத்துக்காளாகும்படி என்னை ஒரு போதும் விடாதேயும்.”

## அதிகாரம்—4

---

### வலேரியான் ஞான தீட்சை.

ஞான தீட்சை நலம்பெற வேற்றுனஞ்
ஞான மார்க்க நாளும் பயின்றவன்
வானர் காட்சி வலேரியான் கண்டது
மான காதை யறைந்திடு வாமரோ.

கடைசியாகக் கல்யாணத்துக்கு வந்திருந்த விருந்தாடிக ளெல்லாம் போயினர். செசீலியா தனது கணவனோடு தனியாய் விடப்பட்டாள். அப்பெண்மணி தனது மோட்ச நாயகனுக்குப் பிரமாணிக்கமா யிருக்கவேண்டுமானுல், அவ ளுடைய அஞ்ஞானக் கணவனுடைய கோபத்தை எதிர்த்து நிற்பதற்கு இதுதான் சமயம். இந்தத் தருணத்தைக் கைவிட்டால் அவள் கருத்து நிறைவேறாது. ஏதோ சிந் திப்பவள்போல ஒரு நிமிஷநேரம் அசையாமல் மௌன மாய் நின்றாள். பின்னர் தேவ இஷ்டப் பிரசாதத்தால் நிரப்பப்பட்டு முகஞ் சிவக்கக் கண்கள் ஜொலிக்க, அவள் சடுதியில் வலேரியான் நின்ற பக்கந் திரும்பி, அவனைப் பார்த்து அன்பும் அமைதியும் நிறைந்த குரலில் "என் னேச மணாளரே, நான் ஓர் இரகசியம் உம்மிடம் சொல்ல விரும்புகிறேன். இதை நீர் எவரிடமும் கூறவில்லை யென்று வாக்களித்தால் நான் சொல்லுகிறேன்" என்றாள்.

அப்படியே வலேரியான் அந்த இரகசியம் எதுவா யிருந்தபோதிலும், ஒருவரிடமும் சொல்வதில்லை யென்று வாக்குத்தத்தஞ் செய்து, அந்த இரகசியம் என்னவென்று கேட்டான்.

உடனே செசீலியா, "அப்படியானால் கேளும். என் தேவனுடைய சம்மனசானவர் ஒருவர் என்னோடு எப்போது மிருக்கிறார். அவர் நான் போகும் இடமெல்லாம் என் கூடவே வந்து என்னையும் விசேஷமாய் என் கன்னிமையை யுங் காத்து வருகிறார் என்பதை நீர் அறிதல் வேண்டும். நீர் அக்கன்னிமையைக் கெடுக்க முயன்றீரோ அவர் உம் மைக் கொல்லுவார். ஆனால் பரிசுத்தமான தூய நேசத் துடன் நீர் என்னை நேசிப்பீரேயாகில், அவர் என்னை நேசிக் கிறதுபோலவே உம்மையும் நேசித்து, அவர் எனக்குச் செய் யுஞ் சகாயங்களை யெல்லாம் உமக்குஞ் செய்வார்" என்றாள்.

வலேரியான் கிறீஸ்துவனல்ல. அவனுக்கிந்த வார்த் தைகள் நூதனமா யிருந்தன. அவற்றின் பொருள் அவ னுக்கு விளங்காததால், அவன் மனதில் சங்கடம் உண்டா யிற்று. என்னமோ ஏதோ என்று கவலை கொண்டான். அம்மொழிகள் அவனுக்கு விளங்கவில்லையேனும் அவற்றில் ஏதோ உண்மையிருக்கிறதென உணர்ந்தான். கோபமும் பொறுமையும் பொங்கி யெழுந்து அவன் மனதை ஒரு புறம் வாதித்தன. மற்றொரு புறம் தேவ இஷ்டப் பிரசாதம் அவனிருதயத்தில் புகுந்து அவற்றோடு போர் செய்தது. இதை யவன் தெளிவாய்த் தெரிந்துகொள்ளவில்லை. ஆனால் கடைசியில் அவன் நல்லுணர்ச்சி ஜெயம்பெறவே, அவளுக்கு மிக வினயமாய் அவன் அளித்த பதிலாவது :—

"என் பிரியமுள்ள செசீலியா, நீ சொல்வதை நான் எங்ஙனம் நம்புவது? உனக்குக் காவலாயிருக்கிறதென்று நீ சொல்லும் இந்த வான தூதனை நான் கண்ணால் கண்டால் உன் வார்த்தைகளை நம்புவேன். நான் அவரைப் பார்க்கை யில் அவர் தேவ தூதர் தாம் என்று எனக்கு நன்றாய்த் தெரிந்தால், உன் வேண்டுகோட் கிணங்குவேன். ஆனால்

அவர் வான தூதரல்லாமல் உன்னைக் காதலிக்கும் ஓர் மனித னெனத் தெரிந்தால், அட்சணமே அதே இடத்தில் உன்னை யும் அம்மனிதனையுங் கொன்றுவிடுவேன்."

இதைக் கேட்டு செசீலியா, "என் நேசரே, என் யோ சனையைக் கேட்டு, அதன்படி நடந்து, சத்தியரும் ஜீவியரு மான சர்வேசுரனை நம்பி, பாவத்தையெல்லாங் கழுவும் பரிசுத்த நீரில் ஞானஸ்நானம் செய்தால், எனக்குக் காவல் புரியும் தேவ தூதரை நீர் காணலாம்" என்று பதிலு ரைத்தாள்.

வலேரியான் :—"மெய்தான். ஆனால் என் பாவங்களைக் கழுவுபவர் யார்?"

சேசீலியா :—"அவ்வாறு செய்யக்கூடிய ஓர் வயோதிபரை நான் அறிவேன். அவர் தேவ தூதரைக் காண்பதற் குப் பாத்திரமானவராக உம்மை மாற்றவல்லவர்."

வலேரியான் :—"அந்த வயோதிபர் எங்கேயிருக்கிறார்?"

சேசீலியா :—"நகரை விட்டு வெளியே ஆல்பியன் ரஸ்தா வில் மூன்று மைல் தூரம் நடந்து சென்றால், மூன்றா வது கல் அருகில் ஒரு ஏழைப் பரதேசியைக் காண் பீர். அவர் நான் அளிக்கும் பிச்சையைக் கொண்டு பிழைத்து வருகிறார். அவரை என் பேரால் ஆசீர் வதித்து, 'என்னை உம்மிடம் அனுப்பியவள் செசீலியா என்னுமாது, பரிசுத்த தந்தையரிடம் என்னை யழைத்துப்போகும்படி அவள் விரும்புகிறாள். ஏனெ னில் அவரிடம் ஓர் இரகசியம் சொல்ல வேண்டியிருக் கிறது' என்று சொல்லும். அவ்வேழைப் பரதேசி **உர்பானுஸ்** என்னும் பாப்பானவரிருக்கு மிடத்துக்கு உம்மை அழைத்துப் போவார். அவர்தான் நான் குறிப்பிட்டவயோதிபர். அவர் சொல்லுவதுபோல்

நீர் செய்து இங்கே திரும்பினால், என்னறையில் எனக்குக் காவலான சம்மனசானவரைக் காண்பீர்.''

ஆர்த்தெழு மரியே றென்ன அணங்கினை நாடி வந்த
கீர்த்திகொள் வலரியானும் கெழும்பொறை மறிபோ லாகப்
பார்த்திலாக் கரந்த வாட்டைப் பரிவுடன் தேடு மாயன்
போர்த்திய தூய்மை யோடும் பொலிந்ததும் விந்தை யன்றோ!

ரோமை நகர் அதிகாரியான தூர்சியஸ் அல்மாக்கியஸ் சக்கிரவர்த்தி நகரில் இல்லாத சமயம் பார்த்துக் கிறீஸ்துவர்களுக்கு விரோதமான சட்டங்களை யமுலுக்குக் கொணர்ந்து அவர்களை வதைக்க ஆரம்பித்தான் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். இதனால் அனேக கிறீஸ்துவர்கள் கொல்லப்பட்டார்கள். உர்பானுஸ் என்னும் பாப்பானவரைப் பிடித்துக்கொல்ல வேண்டுமென அவ்வதிகாரி கவலையாயிருந்தான். ஆகவே அப்பரிசுத்த பாப்பானவர் ரோமை நகரைவிட்டுப் போய் வெளியே மூன்று மைல் தூரத்திலிருந்த காட்டில் ஒரு தனியிடத்தில் ஒளிந்து வசிக்க வேண்டியதாயிருந்தது. அவர் மறைவிடம் கிறீஸ்துவர்களுக்குமாத்திரந் தெரியும். அவர்கள் அவரைச் சந்தித்துப் பேச இராக்காலங்களில் போவதுண்டு. ஆனால் அவருடைய மறைவிடத்தைக் கண்டுபிடிக்க வேவுகாரர் பலர் இருந்தமையால், அவரைக் கண்டு பேசப் போகுங் கிறீஸ்துவர்கள் வெகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டியதாயிற்று. ஆகவே அவர் எதிரிகள் கையில் அகப்பட்டுக்கொள்ளாமல் அவரைப் பாதுகாத்து வந்தவர்கள், அவரைக் காண வருவோரை நன்கு பரிசோதித்துத் திருப்தியடைந்த பின்னரே அவர் வசிக்குமிடத்துக் கழைத்துப்போவார்கள். அவரைக் காணவருங் கிறீஸ்துவர்களுடைய நல்லெண்ணத்துக் கறிகுறியாக அவர்களுக்குள் சில குறிப்பு மொழிகளை வழங்கி

வந்தார்கள். அம்மொழிகளைச் சொல்லக்கூடாதவர்கள் பாப்பானவரைப் பார்க்க முடியாதாம். செசீலியாவுக்கு இந்தக் குழூஉக்குறி தெரிந்திருந்தது. ஆகவே, அவள் பாப்பானவரைப் பார்க்கும் விதத்தை யறிந்திருந்தாள். வலேரியான் நல்லெண்ணத்துடன் வேத மறிய விரும்புகிறான் என்று அவள் நிச்சயமாய் நம்பினபடியால்தான், அவனிடம் அந்த இரகசிய மொழியைச் சொல்லத் துணிந்தாள். அதனால்தான் அவள் உர்பானுஸ் என்னும் பாப்பானவரைக் காண எவ்வாறு போவதென்றும், என்ன அடையாளத்தைச் சொல்ல வேண்டும் என்றும், வேத மறிந்து ஞானஸ்நானம் பெற அவள் அனுப்பியதாக அம்மாதவருக்குச் சொல்ல வேண்டுமென்றும் வலேரியானை எச்சரித் தனுப்பினாள்.

உடனே வலேரியான் நடுச்சாமத்திற் புறப்பட்டு அந்த வயோதிபர் இருக்கு மிடத்தை நாடிச் சென்றான். நகருக்கு வெளியில் மூன்று மைல் தூரம் நடந்த பின், செசீலியா குறிப்பிட்டிருந்த காட்டை நெருங்கினான். அந்த ஸ்தலம் ஜன நடமாட்ட மில்லாத ஏகாந்த இடமாயிருந்தது. அங்கே மனிதர் வசிக்கக்கூடும் எனச் சந்தேகிக்கவும் இடமில்லா திருந்தது. ஏனெனில் அந்தக் காட்டில் வீடு வாசலொன்றுந் தென்படவில்லை. ஆங்காங்கு முட்புதர்களும், கற்பாறைகளும், அவற்றிற் கிடையில் பாழடைந்த சிறு கட்டடங்களு மிருந்தன. ஒரு காலத்தில் அவ்விடத்தை ஜனங்கள் பிரேதங்களை யடக்கஞ் செய்யும் கல்லறைக்காக உபயோகப்படுத்தி யிருக்க வேண்டும். ஆயினும் வலேரியான் முன் பின் யோசியாமல் செசீலியா குறிப்பிட்ட வழியைப் பிடித்துக்கொண்டு நேரே சென்றான். அவ்வாறு அவன் கொஞ்ச தூரம் இருட்டில் கஷ்டப்பட்டு கல்லும் முள்ளும் நிறைந்த வழியே போகையில், தூங்கிக்கொண்டிருப்பவன்

போல் காணப்பட்ட ஒரு மனிதன் கற்பாறை யொன்றன் மேல் படுத்துக்கொண்டிருப்பதைக் கண்டான். உடனே அவனை யணுகி செசீலியா குறிப்பிட்ட அடையாள வார்த்தையைச் சொன்னான். உடனே அம்மனிதன் திடுக்கிட்டெழுந்து, வலேரியானைத் தன் சகோதரன்போல் அன்பாய் வரவேற்று, பாப்பானவர் மறைந்து வசித்த காட்டகோம் என்னும் பழைய சுரங்க வறைகள் ஒன்றுக் கழைத்துப் போனான்.

உர்பானுஸ் என்னும் பாப்பானவரை வலேரியான் கண்டு தனக்கும் செசீலியாவுக்கும் நடந்த சம்பாஷணையை விவரமாய் எடுத்துரைத்து, கிறீஸ்து வேதக் கொள்கைகளைக் கற்பிக்குமாறு கேட்டுக்கொண்டான். அவ்வயோதிபர் அவன் கூறிய மொழிகளைக் கேட்டானந்தப் பரவசராய் நின்ற இடத்திலேயே முழந்தாட் படியிட்டு வானத்தை நோக்கி, “எங்கள் ஆண்டவராகிய சேசு கிறீஸ்துவே! தூய நினைவுகளின் ஊற்றே! செசீலியாவின் இருதயத்தில் நீர் தெளித்த விதையின் பலனைக் கை யேற்றுக்கொள்ளும். காணமற்போன ஆட்டைத் தேடிச் சென்ற நல்ல ஆயனே, உம தடியாளாகிய செசீலியா நீர் கொடுத்த உன்னத வேலையைச் சாதித்து விட்டாள். கர்ச்சிக்குஞ் சிங்கத்தைப்போல் ஆவேசத்துடன் வந்த அவள் கணவனை, ஓ ஆண்டவரே! அமைதியும் சாந்தமுமுடைய ஆட்டுக்குட்டியைப் போல் உமதண்டைக் கூட்டி வந்திருக்கிறாள். வலேரியானுக்கு விசுவாச மில்லாவிட்டால், இங்கே வந்திருக்கமாட்டான். ஓ ஆண்டவரே! அவன் உம்மில் பூரண விசுவாசம் வைத்து அலகையையும் அதன் செய்கைகளையும் விட்டு விலகும் பொருட்டு அவன் இருதயத்தைத் திறந்துவிடும்.” என்று வெகு நேரம் வேண்டிக் கொண்டனர். அதைக்கண்ட வலேரியான் இருதயம் அனற்படு மெழுகுபோல் உருகிப்

போயிற்று. அப்போது திடீரென வெண்பனிபோன்ற சுத்த வெண்ணுடை யணிந்து, பொன் அட்சரங்களால் எழுதப்பெற்ற ஓர் அழகிய புஸ்தகத்தைக் கரத்தில் பிடித்த வண்ணம் பிரகாசம் சூழ்ந்த வந்திக்கத்தக்க வயோதிபர் ஒருவர் அவர்கள் எதிரில் நின்றார். அவரைக் கண்டதும் வலேரியான் அச்சத்தால் நடுநடுங்கி மூர்ச்சையாகிச் செத்த பிரேதம்போல் தரையில் விழுந்தான். ஆனால் அந்த வயோதிபர் அவனை அன்புடன் தட்டி யெழுப்பி, "இந்தப் புஸ்தகத்திலுள்ள வார்த்தைகளைப் பார்த்து விசுவசிப்பாயாக" என்றார்.

வலேரியான் தன் கண்களை யுயர்த்தி, "ஒரே ஆண்டவர், ஒரே விசுவாசம், ஒரே ஞானதீட்சை, யாவற்றிற்கு மேலாகவும், உண்மையாகவும், நம்மிலும் இருக்கிறவராகிய ஒரே தேவனும் பிதாவும்." என்று சத்தமாய் வாசித்தான்.

அவன் வாசித்து முடித்ததும் அந்த வயோதிபர் அவனைப் பார்த்து, "இதை நீ நம்புகிறாயா அல்லது ஏதேனும் சந்தேகமுண்டா?" என்று வினவினார்.

வலேரியான் உடனே, "பரலோகத்திலுஞ் சரி, பூலோகத்திலுஞ் சரி, இதைவிட மேலான சத்தியம் எதுவும் இல்லை யென்று நான் விசுவசிக்கிறேன்" என்று உறுதியாகவும் உரத்த சத்தமாகவும் மொழிந்தான்.

அதன் பின்னர் அந்த வயோதிபர் மறைந்தார். வலேரியானும் உர்பானுஸ் என்னும் பாப்பானவரும் தனியாய் நின்றனர். அம்மாதவர் அதற்குமேல் தாமதம் ஒன்றுஞ் செய்யாமல் உடனே வலேரியானுக்கு ஞானதீட்சை தந்தார். அக்கால வழக்கத்தின்படி புதிதாய் ஞானஸ்நானம் பெற்றவர் அணிந்துகொள்ளும் வெண்ணுடையை அவனுக்குத் தரிப்பித்து அவனை செசீலியாவிடம் திரும்ப அனுப்பினார்.

## அதிகாரம்—5

### திபூர்சியஸ் மனந் திரும்புதல்

*சோதரனு மனைவியரு நின்ற வுள்ளிற்*
*சுகந்தமண மலரின்றி வீசக் கண்டு*
*மாதருரைக் கிணங்கிமனந் திரும்பிப் பின்னர்*
*மருமமறிந் தகமகிழ்ந்த திறம்பூ தன்றே.*

வலேரியானைப் பாப்பானவரிடம் அனுப்பிய பின் செசீலியா பேசிக் கொண்டிருந்த அறையிலேயே இடைவிடாமல் ஜெபித்துக்கொண் டிருந்தாள். அவள் கணவன் மனந் திரும்பிச் சத்திய வேதத்தைத் தழுவும்பொருட்டுக் கடவுள் அனுக்கிரகஞ் செய்யவேண்டு மென்னுங் கருத்துடனே வெகு பய பக்தியுடன் வேண்டிக் கொண்டாள். வலேரியான் திரும்பி வருமளவும் அந்த இடத்தைவிட்டசையவே யில்லை.

வலேரியான் ஞான ஸ்நானம் பெற்று வீட்டுக்குத் திரும்பினதும், நேரே செசீலியம்மா ளிருந்த அறைக்குச் சென்றான். ஆ, என்ன ஆச்சரியம்! அங்கே அப் பெண்மணி முழங்காலி லிருந்த வண்ணம் ஜெபித்துக் கொண்டிருக்க, அவள் பக்கத்தில் ஜெக ஜோதியாய் விளங்கும் ஓர் அழகிய சம்மனசு முகத்தில் மோட்சப் பிரகாசம் வீச நின்றுகொண்டிருந்ததைக் கண்டான். வலேரியான் இந்த உன்னதக் காட்சியைக் கண்டாச்சரிய மடைந்து இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்கள் அக்காட்சியைவிட் டப்புறம் போக மனமில்லாதன போல் அசைவற் றிருந்தன. அவன் அவ்வாறு பார்த்திருக்கையில், சம்மனசானவர் கையில் ரோசா, லீலி என்னும் இரு மலர்க

ளால் தொகுக்கப்பட்ட இரு புஷ்ப முடிகள் இருப்பதைக் கவனித்தான். அவற்றில் ஒன்றை அவர் அவன் சிரசின் மேலும் மற்றொன்றை செசீலியாவின் சிரசின் மேலும் வைத்து, அவ்விருவரையும் நோக்கி, "இந்த மலர் முடிகளை மோட்சத்திலிருந்து கொண்டு வந்தேன். இனிமேல் நீங்களிருவரும் பரிசுத்தமுங் கற்புக்குப் பழுதில்லாததுமான நேசத்துடன் ஒருவர் ஒருவரை நேசிக்க வேண்டுமென சேசுநாதரே இவற்றை உங்களுக் கனுப்பி யிருக்கிறார். இந்தப் புஷ்பங்கள் எப்போதும் வாடா, நறுமணமுங் கெடா. கற்பென்கிற புண்ணியத்தை நீங்கள் நேசிப்பது போல் யார் நேசிக்கின்றனரோ அவர்கள் தாம் இம் முடிகளைக் கண்ணால் பார்க்கக் கூடும். மற்றவர்கள் கண்ணுக்கு இவை புலப்படா" என்று வலேரியானை மட்டும் தனிப்பட விளித்து, "வலேரியானே, நீ உனது மனைவியின் வேண்டுகோட்கிணங்கினமையால், சர்வேசுரன் உன்னை மிகவாய் நேசித்து நீ அவரை என்ன கேட்டாலுங் கொடுக்கச் சித்தமா யிருப்பதாகச் சொல்லும்படி என்னை அனுப்பினார்" என்று மொழிந்தார்.

வலேரியான் இருதயத்தில் ஆச்சரியமும் ஆனந்தமும் நிறைந்தன. அவன் அப்படியே நெடுஞ்சாங் கடையாகத் தரையில் விழுந்து சர்வேசுரனுக்கு நன்றி யறிந்த ஸ்தோத்திரஞ் செய்து, சம்மனசானவரைப் பார்த்து, "நான் இவ்வாழ்க்கையில் பெறவேண்டுமென ஆசிப்பதெல்லாம் திபூர்சியஸ் என்னும் என் சகோதரன் மனந் திரும்பி நமதாண்டவராகிய சேசு கிறீஸ்து நாதரை யறிய வேண்டுமென்பதைத் தவிர வேறொன்றுமில்லை. ஏனெனில் நான் அவனை என் உயிரே போல் நேசிக்கின்றேன். நான் இப்போது அனுபவிக்கும் தேவ வரப்பிரசாதத்துக்கு அவனும் பங்காளியாக

வேண்டுமென்பது என் பேராவல்" என்று பணிவாய் மொழிந்தான்.

இம்மொழிகளைக் கேட்டதும் சம்மன சானவரின் முகத்தில் சந்தோஷப் பிரகாசம் வீசியது. உலகில் ஒரு பாவி மனந் திரும்பினான் என்றால் வானதூதர் அளவற்ற மகிழ்வெய்தி ஆனந்தங் கொண்டாடுதல் வழக்கமாம். ஆகவே வலேரியான் விண்ணப்பத்தைக் கேட்ட இந்த சம்மன சானவர் கொண்ட அளவில்லா அகமகிழ்ச்சி அவர் வதனத்தில் சுடர் விட்டுப் பிரகாசித்ததோர் ஆச்சரியமல்லவே. உடனே அவர் வலேரியானை நோக்கி, "உன் விண்ணப்பத்துக் கிரங்க நமதாண்டவர் சித்தமாய்க் காத்திருக்கிறார். இதை விட அவருக்கு மிகப் பிரியமான விண்ணப்பம் வேறொன்றுமே யில்லை. உன் இருதயத்தை அவருடைய அடியாளாகிய செசீலியா எப்படி அவர்பால் திருப்பி வசப்படுத்த நேர்ந்ததோ, அப்படியே நீயும் உன் சகோதரனுடைய இருதயத்தை அவர்பால் திருப்பி வசப்படுத்துவாய். மேலுஞ் கொஞ்ச காலத்துக்கெல்லாம் நீங்களிருவரும் வேதசாட்சி முடிபெறும் பாக்கிய மடைவீர்கள்" என்று பின்னால் நடக்கப்போகிறதை முன்னதாகவே சர்வேசுரனுடைய ஏவுதலால் தெரிவித்து, அவர்களைத் தனியே விட்டு மறைந்தார்.

தேவதூதர் மறைந்த சில நிமிஷங்களுக்குப் பிறகு திபூர்சியஸ் வலேரியானும் அவன் மனைவியும் இருந்த அறைக்கு வந்தான். வானலோகத்திலிருந்து சம்மன சானவர் கொணர்ந்து சூட்டிய மலர் முடிகள் அவன் கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் அவற்றின் நறுமணம் அவன் நாசியில் புகுந்தது. "நேசா, லீலிமுதலிய மலர்கள் புஷ்பிக்குங் காலம் அல்லவே இது. அப்படியிருக்க இங்கே இரு

மலர்களின் மகரந்தம் வீசக் காரணமென்ன?" என்று மிகுந்த ஆச்சரியமுற்றுத் தன் சகோதரனை வினவினான்.

அதற்கு அவ்விருவரும் மெய்யான கடவுள் தங்கள் மேல் கிருபை கூர்ந்த வைபவத்தை எடுத்துரைத்து, அஞ்ஞானிகள் வணங்குந் தேவதைகள் பிசாசுகளே யொழிய தேவரல்லவென்றும், கிறிஸ்துவர்கள் வழிபடுந் தேவனே மெய்யான கடவுளென்றும் பல நியாயங்களைச் சொல்லி அவனை எப்படியாவது மனந்திருப்ப முயன்றனர். திபூர்சியஸ் கொஞ்சநேரம் யோசனை செய்து பார்த்து அவர்கள் கூற்றின் உண்மையை உணர்ந்தவன் போல் உடனே தனக்கு ஞானஸ்நானங் கொடுக்கு மனிதரிடம் அழைத்துப் போகும்படிச் சொன்னான். சதிபதிக ளிருவரும் அவனுக்கு ஞானதீட்சை யளிப்பவர் யார் என்றும், அவர் ஒளிந்திருக்கும் இடத்தையும் விவரமாய்ச் சொன்னார்கள்.

அதைக் கேட்டதும் திபூர்சியஸ், "என்ன சொன்னீர்கள்? அந்த மனிதன்தானே கிறீஸ்துவர்களுக்குத் தலைவன்? அவன் தானே அதிகாரியின் ஆக்கினைக்குப் பயந்து ஒளிந்துகொண்டிருப்பவன்? அவன் இருக்கு மிடந் தெரிந்தால் அவனைப் பிடித்துக் கொன்றுவிடுவது திண்ணம். நாம் அவனோ டிருந்தால் நமக்கும் அந்தக் கதிதான் என்பதை யறியீரோ? மோட்சத்தில் ஒளிந்துகொண்டிருக்குந் தெய்வத்தைத் தேடிப் பிடிக்க நாம் செய்யும் இந்த மூட முயற்சி இவ்வுலகில் நமக்கு மாணம் என்னும் ஆபத்தைக் கொண்டு வந்துவிடும்" என்று ஆவேசங் கொண்டவன் போல் பேசினான்.

இம் மொழிகளை வருத்தத்துடன் கேட்டுக் கொண்டிருந்த நமது கன்னியர் சிரோமணி, "இந்தப் பூலோகத்தில் மட்டுமே நாம் ஜீவித்து, இத்துடன் நமது உயிர் முடிந்து

விடுமாயின், நீர் சொல்வது முற்றும் நியாயமென்றே சொல்வேன்.

*நீரிற் குமிழி நிலவாழ்க்கை நித்தியமோ*
*பாரிற் பிரிந்தக்காற் பார்த்திடலாம்—நேரில்*
*அவரவர் செய்யு மறமறங்கட் கேற்ற*
*தவரவர்க் கம்மை யமைப்பு.*

ஆனால் நமது தற்கால வாழ்க்கையோ துன்பவருத்தங்கள் நிறைந்தது; சீக்கிரம் முடிந்துபோகும். அது முடிந்ததும், முடிவில்லாத மற்றொரு ஜீவியம் வரும். அந்த ஜீவியத்தில் நாவினால் எடுத்துரைக்க முடியாத பேரின்பத்தை நீதிமான்கள் அநுபவிப்பார்கள், பாவிகளோ நித்திய நரகாக்கினியில் தண்டிக்கப்படுவார்கள். அப்படியிருக்க மின்னலைப்போல் மறையும் இந்த அநித்திய வாழ்வை நாம் இழக்க அஞ்சலாமா? இந்த வாழ்வை இழப்பதால், நித்தியத்துக்கு முடிவில்லாத மோட்சானநந்தத்தைப் பெறுவோம் என்று நிச்சயமாய்த் தெரிந்த பின்னரும், நாம் நமது உயிரைத் துறக்கப் பயப்படலாமோ?" என்று திபூர்சியசைக் கேட்டாள்.

ஆனால் அவன் அவள் என்ன சொன்னபோதிலுங் கேட்கிறவனா யில்லை. இந்தச் சத்தியத்தை அவன் நம்பக் கூடாதவனா யிருந்தான். "கல்லாலும் மரத்தாலுஞ் செய்த விக்கிரகங்களைத் தெய்வம் என்று கும்பிடுவது சரியல்ல வென்றுணர்கிறேன். ஏனெனில் அவை தேவரல்லவென்று நியாயப் பிரமாணமாய் அறிகிறேன். ஆனால் நீங்கள் சொல்லும் இந்தக் கிறீஸ்து வேதத்துக்காக மன மொப்பி உயிரைக் கொடுத்தல் எங்ஙனம்? இந்த நிபந்தனைக்கும் உட்படுவார்களா? எனக்கென்னவோ உயிரைக் கொடுக்கப் பிரியமில்லை. இந்த உயிரென்ன அவ்வளவு அற்பக் காரியமா?" என்றான்.

ஆனல் செசிலியா அவனை அத்துடன் விட்டு விடவில்லை. அப்போஸ்தலரைப் போல் இஸ்பிரீத்து சாந்துவினலேவப்பட்டு ஒன்றுமறியாப் பேதையாகிய அப் பெண்பிள்ளை அவனுக்குப் பல நியாயங்களை யெடுத்துக் காட்டினுள். உலகம், பசாசு, சரீரம் என்னும் முப்பகைவரின் போர், பாவத்தின் விஷம், நித்திய வாழ்வின் உண்மை, அவதாரப் புருஷரின் அணைகடந்த அன்பு, சிலுவையின் பரித்தியாகம் முதலிய விஷயங்களைச் சவிஸ்தாரமாய் அவனுக்குப் போதித்தாள். அப்போது அவளிடம் தேவ அருளும் வேத வைராக்கியமும் நிறைந்திருந்ததைத் திபூர்சியஸ் கண்டான். அவள் சொல்லிவந்த நியாயங்கள் சரியென அவன் புத்தியிற் பட்டது. கடைசியில் அவன் விசுவசித்தான். உர்பானுஸ் என்னு மாதவரிடம் தன்னை யழைத்துப் போகும்படிச் சொன்னன். அப்படியே அவனைக் கூட்டிப்போய் அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தார். ஏனெனில் அவன் மனதில் கெட்ட எண்ணம் ஒன்றுமில்லை. அவன் தனது பழைய கொள்கைகளையும் பாவங்களையும் விட்டொழித்தான். அவன் இருதயத்தில் சத்தியவேத விசுவாசம் உறுதியாகி வேரூன்றிற்று. கடைசியில் அவனும் வலேரியானைப்போலவும் அவன் மனைவியைப் போலவும்தான் புதிதாய்த் தழுவிய மெய்ம்மறைக்காகத் தன் இரத்தத்தைச் சிந்தும் நாள் எப்போ வருமென வெகு ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

# அதிகாரம்—6

## வேதத்துக் குயிர் தந்த சகோதரர்

வேத மார்க்கந் தழுவினதால்
வெய்ய கோபங் கொண்டதிபன்
ஏத மென்றே சோதரரை
யீனர் போலப் பல்வகைய
நீதஞ் செய்து மனவுறுதி
நீங்கா துற்றப் பரம்பொருளைப்
போதஞ் செய்து வசமாக்கிப்
பொங்குஞ் சென்னீர் தந்தனரே.

சகோதரர் இருவரும் மனந்திரும்பிக் கிறீஸ்துவர்களானது முதல் உலகத்தில் தங்களுக் கிருந்த உயர்ந்த அந்தஸ்தையும் குலப் பெருமையையும் ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு, அக் காலத்திய கிறீஸ்துவர்களின் முக்கிய அடையாளமாகிய தர்ம கைங்கரியங்கள் என்னும் புண்ணிய நெறியில் ஒழுகலானார்கள். அவர்களுக் கிருந்த அளவற்ற செல்வத்தை ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தனர். வேதத்துக்காகச் சிறை வாசஞ் செய்யுங் கிறீஸ்துவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு வேண்டிய உதவி புரிந்து ஆறுதல் மொழி கூறி வந்தார்கள். சேசுவின் சிநேகத்துக்காக உயிரைத் தந்து மரித்த வேத சாட்சிகளைத் தாமே எடுத்துப் போய் நல் லடக்கஞ் செய்தனர். எந்நேரமும் ஏழைகள் நடுவிலும் சிறைச்சாலைகளிலும், கொலைக் களத்திலும் அவ்விரு சகோதரரும் காலத்தைக் கழிப்பதைக் கண்டவர்கள், அவர்கள் ஜீவியத்தில் நேர்ந்திருக்கும் புதிய மாறுதலைக் கவனிக்கத் தலைப்பட்டனர்.

இந்தச் செய்தி நகராதிபன் காதுக் கெட்டியது. தூர்சியஸ் அல்மாக்கியஸ் என்னும் அந்த அதிகாரி இளைஞர் இருவரையும் வரவழைத்து, "உயர்குலத் துதித்த வாலிபரே, உங்கள் நடத்தை ஒன்றும் நன்றாயில்லை. உங்கள் குலப் பெருமைக்குத் தகுந்த விதமாய் நடந்து கொள்வதை விட்டு, கேவலம் நீசருக்குச் சமானமான கிறீஸ்துவர்களோடு சகவாசஞ் செய்வதைக் காண எனக்கே வெட்கமாயிருக்கிறது. உங்கள் முன்னோர் வைத்துப் போன செல்வத்தை ஏழைகளுக்குத் தான தர்மஞ் செய்து வீணாக்குகிறீர்களே. அதற்காகத்தானா அந்தப் பணம் உங்களுக் களிக்கப்பட்டது? புத்திசாலிகளா யிருப்போர் செல்வத்தை விருத்தி செய்யும் வழியைத் தேடி தங்கள் அந்தஸ்தைக் காப்பதற்குரிய செலவு செய்து உலகத்தில் பெருமையாய் வாழப் பிரியப்படுவார்கள். அதைவிட்டுப் பணத்தை ஓட்டாஞ் சல்லியாக மதித்து உங்கள் மனம் போனவாறு ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பது என்ன மதியீனம்! சீ, சீ, இந்தத் தொழில் உங்களுக்குக் கூடவே கூடாது. இந்த மதியீனத்தை விட்டொழித்து, உங்கள் முன்னோர்கள் நடந்ததுபோல் ஒழுகி உங்கள் குலப்பெயரைக் காப்பாற்றுங்கள். கிறீஸ்துவர்களின் மாய வலையிற் சிக்கி மதிமோசம் போகவேண்டாம். அவர்கள் சிநேகமே வேண்டாம். நமது மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தியவர்கள் கட்டளையிட் டிருக்குமாப்போல், ரோமை இராச்சியத்தை எதிரிகளி னின்றுங் காப்பாற்றி யாதரித்துவரும் சிரஞ்சீவிகளாகிய நமது தேவதைகளை வணங்கி வழிபடுவீர்களாக. இல்லையேல் உங்களுக்குக் கெடுதலே. முன்னதாகவே எச்சரிக்கிறேன். ஜாக்கிரதை!" என்று கடிந்து பேசினான்.

ஆனால் நமதிளைஞர் இருவரும் இந்தக் கடுமொழிகளை யும் கஷ்டங்களையும் எதிர்பார்த் திருந்தவர்க ளாதலின், அதி காரியின் மிரட்டலுக் கஞ்சாமல், "ஐயனே, நீர் இவ்வாறு பேசவே எங்களை அழைக்கிறீர் என்று எங்களுக் கப்போதே தெரியும். நீர் சொல்வதில் நூதனம் ஒன்றுமில்லை. ரோமை நகரின் பிரபுக்கள் என்றும், அரசவை யங்கத்தினர் என் றும் அழைக்கப்படுவதைக் காட்டிலும் கிறீஸ்துவன் என் னும் நாமம் புனைதல் எவ்வளவோ பெருமை யென்பது எமது கொள்கை. பூலோக அரசரின் தயவைக் காட்டிலும் பரலோக அரசனுடைய் தயவே பெரிதென்று மதிக்கிறோம்.

மண்ணரசர் தயவெமக்கு வேண்டாமைய்யா
மாட்சிமையுஞ் செல்வசுக போகம்வேண்டாம்
விண்ணரசர் தயவிருந்தா லதுவேபோதும்
வீயாத நித்தியநற் போக முண்டு
நண்ணியவர் சத்தியநன் னெறிக்குமாறாய்
நவில்சட்ட மெதுவேனு மகிழ்ந்தொதுக்கி
புண்ணியவந் நெறியொழுகி யுய்வோம்கண்டாய்
புவியிருளைக் காய்ந்தபரு னருளினாலே.

ஆகவே, மெய்யான சர்வேசுரனுடைய சட்டங்க ளுக்கு மாறாக விருக்கும் மனிதச் சட்டங்களை மதிக்காமல், அவருடைய சிறந்த கற்பனைகளையே அனுசரிப்ப தென்று தீர்மானித்து விட்டோம். இனி அத் தீர்மானத்தினின்றும் நாங்கள் எள்ளளவும் பிறழப்போகிறதில்லை" என்று தைரிய மாய்ப் பதிலுரைத்தார்கள்.

அவர்களை என்னசெய்வ தென்று அதிகாரிக்குத் தெரியவில்லை. வலேரியான் குடும்பம் சக்கிரவர்த்திக்கு அறி முகமானது. மேலும் சக்கிரவர்த்திக்குக் கிறீஸ்துவர்கள் மேல் துவேஷமே யில்லை. அதற்கு மாறாக அவர்களை அவன் மரியாதையாய் நடத்தி அவர்களிற் சிலரோடு சிநேகப்

பான்மையாய் ஒழுகி வந்தான். அல்மாக்கியசுக்கு இந்த விஷயம் நன்றாய்த் தெரியும். பாமர ஜனங்களில் அனேகரைக் கிறீஸ்துவர்கள் என்னுங் காரணத்தால் ஆயிரக் கணக்காகச் கொலைக் களத்துக் கனுப்பி வதைசெய்யப் பின் வாங்கவில்லை யாயினும் இந்த இரண்டு வாலிபர் விஷயத்தில் அவ்வாறு நடந்துகொள்ள அஞ்சினான். ஏனெனில் உயர்குலத் துதித்தவர்களைத் தொந்தரை செய்தால் தனக்கே கெடுதலாய் முடியும் என்பது அவன் எண்ணம். அதனால் .தான் அவர்களை யழைத்து வரச்சொல்லி நயத்திலும் பயத்திலும் அவர்களைத் தன் வழிக்கு வருமாறு தூண்டினான். கிறீஸ்து மார்க்கத்தைவிட்டுத் தங்கள் முன்னோர் வணங்கிய தெய்வங்களை அவர்கள் கும்பிட வேண்டுமென எவ்வளவோ நியாயங்கள் சொல்லிப் பார்த்தான். ஒன்றும் பலிக்கவில்லை. சத்திய மார்க்கத்தில் முழு நம்பிக்கை வைத்த அவர்கள் மனதில் அவனுடைய குருட்டு நியாயங்கள் இடம் பெறவில்லை. அவன் வற்புறுத்திப் பேசப் பேச அவர்களுடைய விசுவாசம் அதிக மதிகமாய் உறுதி யடைந்து, மனந் திரும்புவதற்கு வழியில்லாமற்போய் விட்டது. அதைக் கண்ட நகராதிபன் தன் சூழ்ச்சி யொன்றும் அவ் வாலிபரிடம் பலிக்க வில்லையே என மனம் புழுங்கி, தனது கட்டளைக்குப் பணியாதவர்களைத் தண்டிக்காவிட்டால் மற்றவர்கள் தன்மீது கெட்ட அபிப்பிராயங் கொண்டு அவனை யவமதிப்பார்கள் என்றெண்ணி, அவ்விரு சகோதரரையுங் கொண்டு போய் நையப் புடைக்குமாறு ஆக்யாபித்தான்.

அப்படியே சேவகர் அவர்களைக் கட்டி யிழுத்து ரோமை நகரின் பிரதான வீதிகளூடே சாட்டையால் அடித்துக்கொண்டு போக, சிலர் கட்டியங் கூறுவதுபோல், “நமது தெய்வங்களை அவமதித்துத் தூஷிக்கிறவர்கள் கதி

இதுவே! ஜாக்கிரதை!" என்று கூவிக்கொண்டு போனார் கள். ஜனங்கள் ஆங்காங்கு கும்பல் கும்பலாய் நின்று மெய்யான சர்வேசுரனுக்காகக் கசையடி வாங்கித் தைரிய மாய்ச் செல்லும் அவ்வழகிய இரு வாலிபரையுங் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். சிலர் அவர்கள் கதியைக் கண்டு பரிதாபங் கொண்டு வருந்தினர். சிலர் "இவர்களுக்கே னிந்தப் பிடிவாதம்? அதிகாரி சொல்வது போல் செய் வது தானே?" என்று பேசிக் கொண்டனர். வேறு சிலர், "நாம் உயர்குலத் துதித்தவர்கள், நம்மை அதிகாரி என்ன செய்யக்கூடும் என்று கர்வங் கொண்டிருந்ததற்கு இது தக்க தண்டனையே!" என்று பேசிக் கொண்டனர். மற்றுஞ் சிலர், "மன சாட்சியின் சொற்கேட்டு, உண்மை நெறியைப் பின்பற்றுவது கூடாதென்பது என்ன நியா யமோ தெரியவில்லையே," என்று எங்கே வெளியிற் சொன் னால் தங்களுக்கும் இந்த உபத்திரவம் நேருமோ என அஞ்சி வாய்விட்டுப் பேசாமல் மனதிற் குள்ளாகவே நினைத் துக் கொண்டனர்.

இப்படித் தத்தம் புத்தியிற் பட்டவாறு பேசிக்கொண் டிருக்கும் ஜனங்கள் மத்தியில் அடி யுதைபட்டு அவமான மாய்ச்சென்ற வாலிபரில் ஒருவனாகிய வலேரியான், "ரோமை நகர வாசிகளே, நாங்கள் படும் அவமான நிஷ்டூரங்களால், நீங்கள் பயந்து கிறீஸ்து வேதத்தைத் தழுவாமலிருந்து விடப் போகிறீர்கள்.

வேத மாமறைக் காய்த்தமர் விட்டுபல்
லேத முற்றவ மானங்க ளெய்துதல்
கோதிலாக் கிறீஸ் தாண்டவர் கோன்மலர்ப்
பாத பங்கயஞ் சேர்த்திடும் பாதையே.

எங்கள் அவமானம் கிறீஸ்துவின் பாதத்துக்கு உங்க ளைக் கொண்டுவந்து சேர்க்குந் துண்டுகோலா யிருக்கக் கட

வது. கிறீஸ்துவர்களின் விசுவாசத்துக்குச் சாட்சி சொல்ல அஞ்சாதீர்கள். தைரியமா யிருந்து மெய்யான சர்வேசுரன் ஒருவரே என் றறிந்து அவரையே விசுவசியுங்கள். அடிக்கு முதைக்கு மஞ்சி அழியாத ஆத்துமாவைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். நிந்தை யவமானங்களுக்குப் பயந்து நின்மல பரிசுத்தமாகிய சத்திய சுரூபியைவிட் டகலாதீர்கள். அல்மாக்கியஸ் என்னும் அதிகாரி வணங்கும் கற்சிலைகளைப் பாதத்தில் போட்டு மிதியுங்கள். கல்லாலும் மாத்தாலுஞ் செய்யப்பட்ட அந்த விக்கிரகங்களைக் கணப் போதுங் கண்கொண்டு பாராமல் அக்கினிக் கிரையாக்குங்கள். ஏனெனில் அவற்றை வணங்குவோர் யாராயிருந்தாலுஞ் சரி, அன்னார் நித்திய நாகாக்கினியில் வீழ்ந்து வேகாமல் வெந்து அவதிப்படுவார்கள் என்பது திண்ணம்!" என்று தைரியமாய் மொழிந்தான். என்ன துணிச்சல்!

ஞானமுறும் வேதவிசு வாச மென்னும்
நற்கவசம் பூண்டநமை எதிர்க்கும் பொய்யஞ்
ஞானமுறு மாற்றலர் வெஞ்சமரில் வெல்ல
நவிலரிய நிந்தையவ மான முற்று
வானபரி வாரமெனுந் தூத ரேவல்
வழியொழுக விருந்தும் பரதேசி போல
மோன உருவாய்க் குருசில் தொங்கிநின்ற
முதல்வனருள் துணையிருக்க வேண்டுங் கண்டீர்.

" ஆம், விசுவாசம் என்னும் கவசத்தை யணிந்து வேத விரோதிகளை எதிர்ப்பவர் பக்கத்தில் துணையாய் நிற்பவர் மன்பதைக்காக மனுவுருவெடுத்துத் துன்ப துரிதங்க ளென்னுந் துயர்க்கடற் படிந்து சிலுவை மரத்தில் தொங்கி யுயிர் நீத்த தீனதயாளுவாகிய மோன குருவல்லவா?" என்று சொல்லிக்கொண்டே போனான்.

அல்மாக்கியஸ் வலேரியான் கூறிய வீரமொழிகளைக் கேட்டு அடங்காக் கோபங் கொண்டானென்று சொல்லவும் வேண்டுமோ? எல்லோரு மறியப் பகிரங்கமாக அவனுடைய அதிகாரத்தை அவமதித்த வாலிபர் மட்டில் இனி இரக்க மென்பது காட்டவே கூடாதென் றெண்ணினான். சக்கிர வர்த்தியின் கோபத்துக் காளாக வேண்டி வருமே என் பதை மறந்தான். கோபாவேசங் கொண்ட கோளரிபோல் கர்ச்சித்து, "இந்த மூர்க்கப் பயல்களை உடனே கொண்டு போய் ஜூப்பிட்டர் என்னுந் தேவதையின் கோவிலில் கொன்று விடுங்கள்" என்று கட்டளை யிட்டான்.

அதிகாரியின் கட்டளையை நிறைவேற்றும் வேலை மாக்சி மஸ் என்னும் போர் வீரனுக்குக் கொடுக்கப்பட்டது. அவன் இளகிய நெஞ்சினன்; இரக்கம் நிறைந்த மனத்தினன். சீரும் சிறப்பும் வாய்ந்த பிரபுக்களாகிய இந்த வாலிபர் பொன் னனைய தங்கள் உயிரை வீணிற் பரித்தியாகஞ் செய்யப் போகின்றனரே என்று வருந்தினான். அன்னார் கொலைக் களத்துக்குக் கொஞ்சமேனும் பயமின்றிச் சந்தோஷமாகப் போவதைக் கண்ட அந்த வீரன், "இந்த வாலிபரைப் போலும் மதியீனரை நான் பார்த்ததில்லை. தாங்கள் செய்வ தின்ன தென்றறியாத மூடர் என்றால் இவர்களுக்கே தகும். தாங்கள் செய்யுங் காரியத்தைச் சற்றே யோசனை செய்து பார்ப்பார்களே யாகில் இவர்கள் இவ்வாறு நடந்துகொள்ள மாட்டார்கள்" என்று அவர்கள்மேல் இரங்கி, அவர்களை எப்படியாவது அதிகாரியின் கட்டளைக்கு இணங்கும்படிச் செய்துவிட வேண்டுமென நியாயம் பேச ஆரம்பித்தான். ஆனால் அவர்களோடு சில வார்த்தைகள் பேச, அவ்வாலிபர் அதற்குப் பதில் சொல்ல வாரம்பித்ததும், அவன் அவர்கள் மட்டில் கொண்டிருந்த அபிப்பிராயம் சரியல்லவென் றுணர்ந்தான். ஏனெனில் அவர்கள் தங்கள் உயிரைச் சேசு

நாதருக்காகப் பரித்தியாகம் செய்வதால் உண்டாகும் ஆனந்தத்தைப்பற்றி அவனுக்கு எடுத்துச் சொல்லி, அந்த உலக வாழ்க்கையை யிகழ்ந்து மோட்ச மகிமையைப் பெற முயல்வ தவசியமென்று எவராலும் மறுக்க முடியாத நியாயங் காட்டி எவ்வளவு உத்சாகமாயும் சாதுர்யமாயும் பேசினார்கள் என்றால், யோசனையின்றி மதியீனமாய்ப் பேசியது தானே யன்றி அவ்வாலிப ரல்லவென்று திட்டமாய்த் தெரிந்து கொண்டான்.

"ஆ, மரணத்துக்குப் பின் வரப்போகும் நித்திய வாழ்வொன் றுண்டு என்று சொல்லுகிறீர்களே, அந்த வாழ் விருப்பது நிச்சயமென எனக்குத் தெரிந்தால் எவ்வளவோ நன்று யிருக்கும்!" என அவன் கூவினான்.

உடனே வலேரியான் இஸ்பிரீத்து சாந்துவின் வரத்தால் நிரப்பப்பட்டு, "நீர் உமது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு ஞானதீட்சை பெற்றுக் கொண்டால், நானும் என் சகோதரனும் அழிந்துபோகும் இப்பாழுடம்பை விட்டுப் பிரிந்த அதே நேரத்தில் உமது கண்கள் திறக்கப்பட்டு, எங்கள் ஆத்துமங்கள் நித்திய மகிமைக்கு எழுந்தருளிப் போவதைக் காண்பீர்" என்று தீர்க்கத் தரிசனமாகப் பின்னால் நடக்கப்போவதை முன்னதாகவே அறிந்து சொன்னான்.

இந்த உறுதிமொழி மாக்சிமஸ் மனந்திரும்புதலை முற்றுப்பெறச் செய்தது. அவ்விரு சகோதரரும் அப் போர்வீரனை ஓர் விண்ணப்பங் கேட்டுக்கொண்டனர். அதாவது, அதிகாரியின் தீர்ப்பை நிறைவேற்றுவதை மறுதினம் வரையில் ஒத்திவைக்க வேண்டுமென்பதே. அதற்கு அவன் தடையின்றி உத்திரவு கொடுத்தது மன்றி, அவர்களைக் கொலைக்களங் கூட்டிப் போவதற்குப் பதிலாகத் தனதில்லத்

துக் கழைத்துச் சென்றான். அங்கே வலேரியானும் அவன் சகோதரனும் அவனுக்கும் அவன் மனைவிமக்களுக்கும் வேதஞ் சொல்லி வைத்தனர். ஆகவே அப்பரிசுத்த சகோதரரின் நன் மாதிரியாலும் போதனையாலும் அந்தப் போர்வீரன் குடும்பம் மனந்திரும்பிற்று. அன்றிரவு நடுச்சாமத்தில் செசிலியம்மாள் ஒரு குருவானவரை யழைத்துக்கொண்டு அவ்வீட்டுக்கு வந்து மாக்சிமஸ், அவன் மனைவி மக்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பித்தாள்.

மறுநாட் காலையில் வலேரியானும் திபூர்சியசும் ஜூப்பிட்டர் என்னுந் தேவதையின் கோவிலுக்குக்கொண்டு போகப்பட்டார்கள். உடனே அவ்வாலிபரின் தலைகள் வெட்டப்பட்டன. அதே சமயத்தில், என்ன ஆச்சரியம்! சூரியனிலும் அதிகப் பிரகாசத்தையுடைய இரண்டு தேவதூதர் கொலைசெய்யப்பட்ட பரிசுத்த வாலிபரின் ஆத்துமங்களை எடுத்துக்கொண்டு வானத்துக்கு எழுந்தருளிப்போவதைக் காண்பதாக மாக்சிமஸ் ஆச்சரியப்பட்டுக் கூவினான். அருகில் நின்றுகொண்டிருந்த அஞ்ஞானிகள் பலர் அவனுடைய கூச்சலைக் கேட்டு, அவன் கண்ட காட்சியுண்மையென நம்பி அங்கேயே மனந்திரும்பிக் கிறீஸ்துவர்களானார்கள். ஆனால் அல்மாக்கியஸ் மாத்திரம் மனந்திரும்பவில்லை. அவனுக்கு ஆத்திரமுங் கோபமும் அதிகரிக்க மாக்சிமஸ் என்னும் மடையனை உடனே கொலை செய்யும்படி கட்டளையிட்டான். அப்படியே அந்தப் போர்வீரன் மேல் ஈயக்கட்டிகளைச் சுமத்திச் சாட்டைகளால் குரூரமா யடித்துக் கொன்றனர்.

## அதிகாரம்—7

### கன்னிகையின் உன்னத பலி

*மணம்புரிந்து கன்னிமையை மருவிநின்ற*
*மாதரசி வானமண வாளர்க்காக*
*மணம்பிறங்குங் குருதியுயிர் பலியாய்த்தந்த*
*மகத்துவத்தை யுள்ளபடி வரைதலாமோ ?*

அக்காலத்திய ரோமைய சட்டத்தின்படி குற்றவாளிகளாய்க் கொல்லப்பட்டவர்களுடைய ஆஸ்திபாஸ்தியெல்லாம் இராஜாங்கத்தாரால் பறிமுதல் செய்யப்படுவது வழக்கம். ஆகவே வாலிபரைக் கொன்ற அதிகாரி அவர்களுடைய திரண்ட திரவியத்தை எவ்வாறு வசப்படுத்துவதென யோசித்தான். அவன் உடனே புறப்பட்டு அவர்கள் மாளிகைக்குப் போய், செசிலியம்மாளைக் கண்டு அவள் கணவனுடையவும் அவன் சகோதரனுடையவும் ஆஸ்திகளைக் கொடுத்துவிடும்படிக் கேட்டான்.

"அவைகளைப்பற்றி நீர் கவலைப்படவேண்டாம். அவை பத்திரமா யிருக்கின்றன. ஆனால் உமது கைக்கெட்டாத தூரத்திலிருக்கின்றன" என்று அம்மாது சாவதானமாகப் பதிலளித்தாள்.

அவள் மொழிந்ததின் பொருள் அதிகாரிக்கு விளங்கவில்லை. ஆதலால் அதன் பொருளை விளக்கும்படி அவன் கேட்டுக்கொண்டான்.

உடனே செசிலியா முன்பின் யோசியாமல் "ஐயனே, என் கணவருடையவும் அவருடைய சகோதாருடையவும் செல்வத்தை யெல்லாம் சேனுலகிற் பத்திரப்படுத்தி வைத்துவிட்டேன்.

ஐய அன்பரி ளுக்கமு மற்றதும்
மெய்ய தாமுயர் விண்ணகஞ் சேர்த்தனன்
செய்ய வத்தலஞ் செல்லுந் துருக்களால்
னையச் செய்திட நாளு மாகாதரோ ?

அங்கே அதனைத் துருப்பிடிக்காது; செல்லும் எறும்பும் அரிக்காது. நீரும் அங்கே சென்று அதனைக் கைப்பற்ற முடியாது" என்று மொழிந்தாள்.

அவனால் கண்டறிய முடியாதவிதமாய் அவள் பேசியதால் அவனுக்குக் கோபம் ஜனித்தது. ஆகவே அவன் அப் பெண்மணியைப் பார்த்து, "ஏ, செசீலியா, ஏதோ வேடிக்கையாகப் பேசி என்னை ஏமாற்றப் பார்க்காதே. வீண் வார்த்தைகளேன் ? மறைபொருளாய்ப் பேசுவதை விட்டு, உண்மையைச் சொல். ஆஸ்தி யெங்கே யிருக்கிறது?" என்று சற்றே கோபமாய்க் கேட்டான்.

"ஐயா, கோபம்வேண்டாம். கிறீஸ்துவர்கள் ஏழைகளுக்குக் கொடுப்ப தெல்லாம் தமக்கே கொடுப்பதுபோலாகிறதென்றும் அதற்குப் பன்மடங்கு சன்மானங் கிடைக்கும் என்றும் எனதாண்டவராகிய சேசுகிறீஸ்து நாதரே திருவுளம் பற்றி யிருக்கிறார். ஆகவே எங்களாண்டவரிடம் போயிருக்கும் எனது பர்த்தாவுக்கும் அவருடைய சகோதரருக்கும் பன்மடங்கு சம்பாவனை கிடைக்கும் பொருட்டு, அவர்களுடைய சொத்தை யெல்லாம் ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டேன்" என்று செசீலியா தைரியமாக விடை பகர்ந்தாள்.

இப்படியா கடைசியில் ஏமாந்து போனோமென்று அதிகாரிக்குக் கோபமூண்டது. ஒன்றுமறியாப் பேதையாகிய ஒரு பெண்ணா தன்னை ஏமாற்றுவதென்று ஆத்திரங் கொண்டான். ஆயினும் அவன் மனதி லெழுந்த கோபத்

தையும் ஆத்திரத்தையும் வெளிக் காட்டாமல் அடக்கிக் கொண்டு அச்சமயம் போய் விடுவதே யுக்தம் என்றெண்ணி, ஒன்றும் பேசாமல் அவள் மாளிகையை விட்டகன்றான்.

அல்மாக்கியஸ் வேதகலாபனை யாரம்பஞ் செய்யுமுன் கருதியதைவிட அதிகமாகவே செய்துவிட்டான். இத்துடன் தனது குரூரச் செயல்களையும் அடாத காரியங்களையும் நிறுத்திவிட்டால் தாவிலை யென்று நினைத்தான். அவன் மன சாட்சி அவனை வாதித்தது. ஆயினும் உலகத்தில் ஒரு காரி யத்தைச் செய்யத் தொடங்கி அதைச் செவ்வனே செய்து வருகையில் இடையில் அதை விடுவதென்றால் எவர்க்கும் மனம் வராதன்றோ? அப்படியே அல்மாக்கியஸ் கிறீஸ்து வர்களை நாசமாக்க வேண்டுமென்கிற கருத்தைப் பூரணமாய் நிறைவேற்றாம லிருக்க முடியவில்லை. கெட்ட எண்ணமும் ஆசாபாசங்களும் அலைகையோடு சேர்ந்துகொண்டு பாவியை அலைக்கழிக்கின்றன. மரம் சாய்ந்த பக்கத்தில் தானே விழும் என்பதும் பொய்யாமா? இரத்தப் பிரியங்கொண்ட அதிகாரி யால் சும்மா இருக்க முடியவில்லை.

அடவியினிற் சாய்ந்திருக்கு மகலியந்தா னடிபெயர்ந்து
புடவியினிற் சாய்ந்தவழி யன்றிமறு புறம்விழுமோ
விடவியலை யுடையபவ விரிவயவை யொழுகுநரத்
தடவரியின் மாய்வரிதில் தடையிலது மானிலத்தீர்.

செசிலியா உயர்குலத் துதித்தவள் என்று சொன் னோம். அவள் கணவன் குடும்பமும் அப்படியே. வலேரி யானும் அவன் சகோதரனுடன் வேதத்துக்காக உயிர் விட்ட செய்தி நகர் எங்கும் மின்னலைப்போல் பரவிற்று. இதனால் எல்லோரும் செசிலியாவுக்கு என்ன நேருமோ வென அவள் மேலேயே கண்ணாயிருந்தனர். அவள் பகிரங்க மாகத் தான் கிறீஸ்து மார்க்கத்தைச் சேர்ந்தவளெனச்

சொல்லிக்கொள்ள அஞ்சவில்லை. சிறையில் இருந்த கிறீஸ் துவர்களை எல்லோரு மறியச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறி வந்தாள். அதிகாரியால் கொல்லப்பட்ட கிறீஸ் துவர்களுடைய சரீரங்களை எடுத்துப் போய் நல்லடக்கஞ் செய்தாள். இவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஜனங்கள் அவளைக்குறித்து அடிக்கடி பேசிக் கொண்டிருந் தார்கள். மற்ற கிறீஸ்துவர்களைப் பிடித்துக் குரூரமாய்க் கொலை செய்துவந்த அல்மாக்கியஸ் செசீலியாவை ஒன்றும் செய்யாமலிருப்பதேனே என்று ஜனங்கள் ஆச்சரியத் துடன் பேசிக் கொண்டார்கள். அவர்கள் பேசிக் கொள்வது அதிகாரியின் செவியில் வீழ்ந்தது. செசீலியாவைக் குறித்து பிரஸ்தாபம் ஒன்றும் அதிகஞ் செய்வதற்கு அவனுக்குப் பிரியமில்லை. அதனால்தான் அவளைத் தன் நீதி யாசனத் துக்கு முன் வரவழைக்காமல் தனது ஆட்களிற் சிலரை அவள் வீட்டுக் கனுப்பி, தேவதைகளுக்குப் பலியிடும்படி அவளைத் தூண்டுமாறு ஏவினன்.

இந்த ஆட்கள் அப்படியே அவள் வீட்டுக்குச் சென்று அவளைக் கண்டார்கள். அப் பெண்மணியின் யௌவனத் தையும் வனப்பையும் விசேஷமாய் அவள் பார்வையில் வீசிய மோட்சப் பிரகாசத்தையும் கண்டு அச் சேவகர் அப்படியே பிரமித்துப் போயினர். மாக்சிமஸ் வலேரியானையும் அவன் சகோதரனையுங் கண்டதும் எவ்வாறு இரக்கங் கொண் டானே அவ்வாறே இந்த வீரர்கள் மனதில் செசீலியாவைக் கண்டதும் இரக்கமும் அனுதாபமும் உதித்தன.

ஆகவே மாக்சிமஸ் செய்தது போலவே அவர்களும் அவளைத் தம்வசந் திருப்ப முயன்றனர். "அம்மா, நீ செய் வது சரியல்ல. வீணான குருட்டாட்டத்தை நம்பி, உன் வாலி பத்தையும், அழகையும், செல்வத்தையும், இன்னு மற்று

முள்ள சுக போகங்களையும் பரித்தியாகஞ் செய்தல் மதியீன மல்லவா? அதற்குப் பதிலாய்ச் சில வார்த்தைகளை மொழிந்து நமது தேவதைகளுக்குப் பலியிடுவையே யானல், இவ்வுலகம் அளிக்கக்கூடிய இன்பமனைத்தும் உன்னுடைய தாகும். நீ உன் இஷ்டப்படியிருக்கலாம். உன்னை யாருந் தொந்தரை செய்யப் போகிறதில்லை. ஆகவே இந்த மதியீனத்தை விட்டொழித்து நமது தேவதைகளுக்குப் பலியிடு" என்று அவளை வற்புறுத்தினர்கள்.

ஆனல் செசீலியம்மாளின் இருதயம் பரலோகத்தை நாடியிருந்தது.

ஐயனருளிருந்தா லாதரையின் சிற்றின்பம்
மெய்யான பேரின்பம் மேவுமுயர்—துய்யநிலை
வித்தியா சங்காண விழிகள் திறந்திடுமே
புத்தியிது சொன்னேனிப் போது.

என்றபடி இவ்வுலக சுக போகங்களுக்கும், பரலோகப் பேரின்ப சுகத்துக்கும் உள்ள உண்மை வித்தியாசத்தை உள்ளது உள்ளவாறு உணர்ந்து நன்கறியும் பொருட்டுத் தேவத் திருவருள் அவள் கண்களைத் திறந்துவிட்டது. ஆகவே சாதாரண மனிதர்க்குத் தோன்றுவன போலின்றி, அவளுக்கு அழிந்துபோகும் இப்பிரபஞ்ச வாழ்க்கையின் உண்மை நிலை நன்ருய்த் தெரிந்தது.

ஆகவே அவள் அச் சேவகரைப் பார்த்து, "ஐயன்மீர், நீங்கள் என்மீது காட்டும் அன்புக்கும் அனுதாபத்துக்கும் நான் பெரிதும் நன்றி பாராட்டுகின்றேன். ஆயினும் உங்கள் அன்பு தவறுதலான காரணத்தின் பலனு யிருக்கிறதென்றறிய விசனிக்கின்றேன். ஐயன்மீர், நான் சொல்வதைச் சற்றே செவி சாய்த்துக் கேளுங்கள். சேசுநாதருக்காக எனதுயிரைக் கொடுப்பதால் எனக்கு நஷ்டமென்று

நினைக்காதீர். நஷ்டத்துக்குப் பதிலாக அவ்வளவும் எனக்கு லாபமென்றே சொல்வேன். ஏனெனில் என் நம்பிக்கையெல்லாம் என் ஆண்டவர்மேல் வைத்திருக்கிறேன். அழிந்துபோகும் இவ்வரிய வாழ்க்கையில் எனக்கேற்படும் நஷ்டத்துக்கு ஈடாக அளவற்ற ஊதியம் மறு உலகில் எனக்குக் கிடைக்கும் என்று நிச்சயமாய்த் தெரியும். பத்தரை மாற்றுப் பசும் பொன்னுக்காகப் பாழடைந்த புழுதியையும், நல்ல தேக சுகத்துக்காக நலிகொண்ட பிணியையும் நிலைநிற்கும் உயிருக்காக நிமிஷத்தில் உயிர் பிரிக்கு மரணத்தையும், ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால் நிகரற்ற மதிப்பையுடைய பூசித பொருளுக்காகப் பிரதிப் பிரயோசனமற்ற வீண் பொருளையும் விட்டு விடுவது புத்திசாலித்தனம் என்பீரோ அல்லது மதியீனம் என்பீரோ, சொல்லுங்கள். நித்தியமாய் நிலைநிற்பதை விட்டு அநித்தியமாய் அழிந்து போவதைக் கைப்பற்றுதல் மதியீன மன்றோ? சீக்கிரத்தில் ஒழிந்துபோகுங் கஷ்ட நிஷ்டூர உபாதைகளுக்கும், என் மரணத்துக்குமே என் உயிரைக் கையளிப்பதால், வானமும் பூமியும் அவற்றி லடங்கிய சராசர மனைத்தும் படைத்தளித்துக் காக்கும் அகண்ட பரிபூரண பரம்பொருளும், முடிவில்லாத நித்திய பேரின்ப பாக்கியத்தை எனக்களிப்பவருமாகிய என் நேச மணவாளருடைய அரண்மனைக்குள் பிரவேசிப்பேன் என்று எனக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கையில், நான் அவ்வாறு செய்யலாகாதென நீங்கள் ஏன் விரும்புகிறீர்கள்?" என்று விநயமாய்க் கேட்டாள் அப்பரிசுத்தமாது.

இந்த வார்த்தைகள் அவ்வீரரின் இருதயத்தை யூடுருவிச் சென்றன. அவர்கள் மனதில் அதனால் எழுந்த பேருணர்ச்சியை அவர்களால் மறைக்க முடியவில்லை. ஆகவே இதுதான் நல்ல சமயமென்று அப் போஸ்தலரின் வேத

போதக அவாவினால் தூண்டப்பட்டுத் தன்னையு மறந்தவளாய், அம்மாதரசி, அருகிற் கிடந்த ஒரு சலவைக் கல்மேலேறி நின்று, அப் போர்வீரரை நோக்கி, "ஐயன்மீர், யான் இதுகாறுஞ் சொல்லி வந்த சேசுநாதரை விசுவசிக்கிறீர்களா ?" என்று கூவினாள்.

உடனே அன்னார், "ஆம், உம்மையடிமை கொண்டாளும் தேவ குமாரனாகிய கிறீஸ்துநாதரே மெய்யான கடவுளென்று நாங்கள் விசுவசிக்கிறோம்" என்று ஒரு வாய்ப்பட்டாற்போல் விடை பகர்ந்தனர்.

"அப்படியானால், நேசரே, அல்மாக்கியஸ் அதிகாரியிடந் திரும்பிப்போய் நான் சாகத் தயாரா யிருப்பதாகச் சொல்லுங்கள். கொஞ்சநேரம் தாமதித்து என்னிடம் வாருங்கள். அப்போது நித்திய ஜீவியத்தின் பாக்கியத்தைப் பெறுவீர்கள் !" என்றாள்.

அவள் சொன்னபடியே வீரர் திரும்பிச்சென்று, அவள் கூறியதை அதிகாரிக்குச் சொன்னார்கள். அதன் பின்னர் சற்றே தாமதித்து செசீலியம்மாள் வீட்டுக்கு வந்து பார்க்க, செசீலியம்மாள் வேண்டுகோளுக் கிணங்கி அங்கேவந்து அவ் வீரர்க்காகக் காத்துக்கொண்டிருந்த உர்பானுஸ் என்னும் பாப்பானவரைக் கண்டனர். அம்மாதவரும் அவர்களுக்கு வேதங் கற்பித்து ஞானதீட்சை கொடுத்தார். அவ்வாறு அன்றையதினம் அந்தப் பாப்பானவர் காத்தால் ஞானஸ்நானம் பெறும் பாக்கிய மடைந்தவர்களுள் உயர்ந்த வங்கிஷபதிகளாகிய பிரபுக்கள் சிலரும் இருந்தனராம்.

அதிகாரியின் வீரர் மனந்திரும்பிய செய்தி ஊரெங்கும் பரவிற்று. அல்மாக்கியஸ் இனிச் சும்மாவிருத்தற் கூடாதெனத் தனது நீதியாசனத்தின்முன் செசீலியம்மாளைக் கொண்டுவந்து நிறுத்தும்படியாய்க் கட்டளையிட்டான். அதி

காரி கூப்பிடுகிறான் என்ற செய்தி செவியில் வீழ்ந்ததும் செசிலியம்மாளுக் குண்டான சந்தோஷம் இவ்வள வவ்வள வென்று சொல்லிமுடியாது. ஆவலோ டெதிர்பார்த்திருந்த ஆனந்த நாழிகை வந்துற்றது. அவள் கன்னிமை யென் னும் கற்பழியாத் தூய போர்வையை மாசின்றிக் காப்பாற்றி விட்டாள். தனது மாசற்ற குருதியால் நனைந்து ஒளி வீசும் அவ்வுயரிய போர்வையைத் தனது மோட்ச நாயகருக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கும் நேரங் கிட்டிவிட்ட தென்று நினைத்தாள்.

உடனே அப்பெண்மணி அச்சம் அணுவளவு மின்றிப் போர்வீரர் புடைசூழ அதிகாரியின் நீதி மன்றஞ் சென்றாள். அல்மாக்கியஸ் அவளைப் பல கேள்விகள் கேட்டான். அவளை யெப்படியாவது வேதத்தை மறுத்துப் பொய்த் தேவதைகளை யாராதிக்கும்படிச் செய்துவிட வேண்டு மெனத் தான் கற்ற வித்தையெல்லாம் காட்டிப் பார்த்தான். அப்பெண்ணணங்கினிடம் ஒன்றும் பலிக்கவில்லை. நயந்து பேசினான், பயமுறுத்தினான். அவளுடைய ஆண்டவர் அவளுக் கேற்கெனவே சொல்லி யிருந்ததுபோல, அதிகாரி யின் மிரட்டலுக் கணுவளவு மஞ்சாமல் தைரியமாக அவன் கூறியவைகளை ஒட்டியும் வெட்டியும் எதிர் நியாயங்களை எடுத்துச் சொன்னாள். அவன் கட்டிக்கொண்டிருக்கும் பாவாக்கிரமங்களைக் கண்டித்தாள். அவன் வணங்கும் பொய்த் தேவதைகளையும் அவற்றின் நடத்தைகளையும் பரிக சித்துப் பேசினாள். கடைசியில், "நான் வழிபடுந் தேவாதி தேவனே மெய்யான கடவுள்! அவருடைய இலட்சணங் களையும் மகத்துவத்தையும் யாரால் புகழ்ந்தேற்றக்கூடும்? அவருடைய சிநேகமே எனக்குப் பேரானந்தம்! அவரு டைய திருச்சித்தமே எனது பாக்கியம்! அவருடைய திரு வருளுதவியால் என் குருதியைச் சிந்தி அவரே மெய்யான

கடவுளெனச் சாட்சிகூறுவேன் என்பதே என் நம்பிக்கை!" என்று மொழிந்தாள் அவ்வீரமாது. அவள் கூறிய ஒவ்வொரு சொல்லிலும் வெற்றிக் குறிகள் விளங்கின. கடைசியில் அல்மாக்கியஸ் அவ்வீர மாதோடு வாக்குவாதஞ் செய்து தோல்வி யடைந்ததாக உணர்ந்தான். ஓரிளம்பாவை தன்னை அவமானப் படுத்திவிட்டாளே என்று மனம் புழுங்கி, அதன்கண் எழுந்த கோபத்தை வெளியே காட்டாமலடக்கிக்கொண்டு, இனித் தாமதித்தால் அவமானம் அதிகரிக்குமெனக் கருதி, உடனே செசீலியம்மாளுக்கு மாணதண்டனை விதித்தான்.

அல்மாக்கியஸ் செசீலியம்மாளைப் பகிரங்கமாகக் கொல்லத் துணியவில்லை. ஏனெனில் இதனால் ஒருக்கால் சக்கிரவர்த்தியின் கோபத்துக்காளாக வேண்டி வருமோவென அஞ்சினன். ஆகவே அவளைக் கொண்டுபோய் இரகசியத்தில் குரூரவதை செய்து கொல்லும்படியாய்க் கட்டளையிட்டான். அப்படியே அவளை அவள் வீட்டிலேயே காற்று நுழைய வழியில்லாத ஒரு சிற்றறையில்போட்டு மூடி, அதனடியில் தீமூட்டி எரித்தனர். அதிக உஷ்ணத்தால் அவள் வேதனைப்பட்டு மூச்சுவிட மார்க்கமின்றிக் கஷ்டப்படுவாள் என்பது அதிகாரியின் கருத்து. அவள் அவ்வறையில் ஒரு நாளெல்லாம் இரவும் பகலும் அதற்குள்ளாகவே அடைபட்டிருந்தாள். மறுநாள் காலையில் அவள் இறந்து போயிருப்பதுமன்றி அவள் சரீரம் தீய்ந்து சுருங்கி அடையாளந் தெரியாமல் மாறிப்போ யிருக்குமென்றெண்ணி அங்கே காவல் புரிந்துகொண்டிருந்தவர் அறையின் கதவைத் திறந்து பார்த்தனர். என்ன ஆச்சரியம்! மந்தமாருதம் இன்பமாய் வீசும் குளிர்ந்த பொழிலின்கண் சயனித்திருந்தவர்கள் எப்படி எழுந்து வருவார்களோ அப்படியே அவ்வாரணங்கு குளிர்ந்த முகத்துடன் வெளியே வந்தாள்.

அவள் வதனத்திலாவது மேனியிலாவது ஒருதுளி வியர்வை கூட காணப்படவில்லை. நன்ருய் அயர்ந்து நித்திரை செய்தவர்கள் நல்ல சுகத்துடன் எழுந்து வருவதுபோல் சுறுசுறுப்புடன் நடந்து வந்தாள் அம்மாது. உபாதை நிறைந்த அச்சிற்றறையில் அவள் அடைபட்டிருக்கையில், தீக்குழியில் மூன்று வாலிபரோடிருந்ததுபோலவே, நமதாண்டவர் அம்மாதோடிருந்து அக்கினியின் உக்கிரம் அவளைத் தாக்காமலிருக்கும்படிச் செய்து அவளைக் காப்பாற்றினுர்.

அந்நா ளழற்குழியி லஞ்சலென வாலிபரைத்
துன்னு விருந்தின்பந் துய்த்தாறு தன்மொழியைப்
பன்னு வளித்த பரஞ்சோதி யாரணங்கை
இன்னு வணுகாம லேற்றுதவி செய்ததுவால்.

அல்மாக்கியஸ் இந்த அற்புதத்தைக் கண்டு ஆச்சரியமடைவதற்குப் பதிலாய் அவன் இருதயங் கல்லைப்போல் கடினமாயிற்று. அவன் ஆரம்பித்த குருதி சிந்தும் கொடிய வேலையை முடிக்காமல் விட்டுவிட மனந் துணியவில்லை. ஆகவே அவன் தன் வீரரில் ஒருவனை யனுப்பி அவளைச் சிரச்சேதஞ் செய்யுமாறு ஏவினுன். கிறீஸ்துவின் மணுளியை அனல்விட் டெரியும் அக்கினி எவ்வாறு அணுக வில்லையோ, அதுபோல் கொலைஞனின் கொடிய வாளின் ஜபம் அவளிடம் ஓங்கவில்லை. தான் மூன்று தினங்கள் மட்டும் உயிருடனிருக்க வேண்டுமென சேசுநாதரைப் பிரார்த்தித்துக் கொண்டாள். இதுவே அவள் இவ்வுலகில் செய்த கடைசி பிரார்த்தனை. நமதாண்டவர் அவள் வேண்டுகோளுக் கிணங்கியதுடன், அவள் கேட்டதற் கதிகமாகவே அவளுக்கு வேண்டியதை யளிக்கச் சித்தமானுர்.

அவளுடைய தலையை வாங்கக் கொலைஞன் அவளைக் குறுகியதும், அவள் கழுத்தை நீட்டிக் குனிந்து காட்டினுள்.

கொலைஞனும் வாளை யோங்கி வெட்டினான். வாளின் கூர்மையும் கொலைஞன் பலமும் அவள் சிரத்தை உடலினின்றும் பிரித்திருக்க வேண்டியது. ஆனால் அவள் கழுத்தில் ஆழமான வெட்டுக்காயம் உண்டாயிற்றே யொழிய, தலை துண்டிக்கப்படவில்லை. இதைக்கண்டு கொலைவீரன் தன் பலத்தை யெல்லாங் கூட்டி மீண்டும் ஓங்கி வெட்டினான். மூன்றாவது தடவையும் வெட்டினான். ஆயினும் சிரஞ் சரீரத்தினின்றும் பிரிக்கப்படவில்லை. சட்டப்படி அவன் மூன்று தடவைகளுக்குமேல் வெட்டலாகாது. பலத்தை யெல்லாம் பிரயோகித்து மூன்றுதரம் வெட்டி யிருந்தும், தலை யுடலைவிட்டுப் பிரியாமலிருப்பது ஏதோ தெய்வீக சக்தியால்தான் என்று பயப்பிராந்திகொண்டு அவன் அங்கே நிற்காமல் ஓடிவிட்டான்.

செசீலியம்மாள் குற்றுயிராய் மூன்று தினங்கள் சலவைக் கற்றறையிற் கிடந்தாள். அவள் சிரம் பாதி வெட்டப்பட்டுக் கழுத்தினின்றுந் தொங்கிக்கொண் டிருந்தது. காயத்தினின்றும் இரத்தம் ஒழுகிக்கொண்டே யிருந்தது. அவள் அந்நிலையில் உயிரை வைத்துக்கொண்டு சாகாம லிருந்தது புதுமை யென்றே சொல்லவேண்டும். அவள் தன் குருதியை சேசுநாதருக்காகச் சிந்தவேண்டு மென அடிக்கடி வேண்டிக்கொண்டு வந்தாள். அவ்வேண்டுதல் இப்போது பலித்தது. ஒரே தடவைதான் சிந்தவேண்டி யிருக்கும் என்றெண்ணி யிருந்தாள். இத்தகைய மரணம் சம்பவிக்கு மென அவள் நினைக்கவேயில்லை. அவள் சரீரத்திலிருந்த குருதி யெல்லாந் துளித்துளியாக இவ்வாறு சிந்திச் சாக வேண்டி வருமென அவள் கனவிலும் நினைத்தவ ளல்ல. மூன்று நாட்கள் அவள் இரத்தம் துளித் துளியாய்ச் சரீரத்தினின்றும் வடிய, பாக்கியமுள்ள வேதசாட்சியாய் தேவ சிநேகம் என்னும் பரவசத்தி லீடுபட்டு உபாதையின்றிக்

கிடந்தாள். மாணத் தருவாயி லிருக்கும் அந்த அர்ச்சிய சிஷ்டவளைச் சந்திக்கக் கிறீஸ்துவர்கள் கூட்டங்கூட்டமாய் வந்தனர். அவளுடைய தான தருமத்தால் பிழைத்து வந்த ஏழைகள், தங்களுக்கு அனேக முறை சலியாது கொடை யளித்த திவ்ய காங்களை முத்தி செய்து தங்கள் கண்ணீ ரால் நனைக்க அங்கே வந்தனர். முதியோர் அந்த யௌவன கன்னிகையின் வாயினின்றும் வரும் வானலோக ஞானத் தின் அதியுன்னத பாடங்களைக் கேட்கும்பொருட்டு அங்கு வந்தனர். தூய்மையிலும் குழவியனைய சிநேகத்திலும் மிக்க உயர்ந்து விளங்கிய அம்மாதரசியின் ஆசீரைப் பெறும் பொருட்டு சிறு குழந்தைகள் அங்கே கொண்டுவரப்பட் டார்கள்.

அவ்வாறு வந்தவர்களில் பரிசுத்த பாப்பானவரும் ஒருவர். அவர் தமது நேச மகளைக் கடைசியாகக் கண்டு, அவளுக்குச் சாகுந்தருவாயில் வேண்டிய ஞான உதவி யைச் செய்யும்பொருட்டு, தமது மறைவிடத்தைவிட்டு அங்கே வாத் துணிந்தார். அவர் அவளை யணுகியதும், சந்தோஷத்தோடு அவரைப் பார்த்து, " தந்தையே, என் னிடமுள்ள கடைசி ஆஸ்திகளைத் தங்களிடம் ஒப்புவிக்கும் பொருட்டே இந்த மூன்று தினங்களையும் எனக்குக் கொடுக்க வேண்டுமென நமதாண்டவரைக் கேட்டுக்கொண்டேன். நான் இது காறும் போஷித்து வந்த ஏழைகளை உமது பாதுகாவலில் வைக்கிறேன். இந்த மாளிகை உமக்கே சொந்தம். நான் இவ்வுலகை விட்டுப் போனதும், இதை அபிஷேகம் செய்து கோவிலாக ஏற்பாடு செய்துவிடுங்கள் " என்றாள் அப்புண்ணிய மாது.

மாணத்தருவாயி லிருக்கும் அர்ச்சியசிஷ்ட மாதைச் சூழ்ந்திருந்த தெய்வீக சந்தர்ப்பங்களைக் கண்டு அல்மாக்கி யஸ் பயந்துவிட்டான்போல் காணப்பட்டது. ஏனெனில்

அவள் அப்பெண்மணி அற்புதமாய் உயிர் பிழைத்திருத் தலைக் கேள்விப்பட்டதும், அவளை அதற்கு மேல் ஒன் றும் செய்ய முயலவில்லை. அவளைக் காண வந்த கிறீஸ்துவர் களைப் போகக்கூடாதென்று தடுக்கவுமில்லை. அவள் உயிருட னிருந்த மூன்று தினங்களில் கிறீஸ்துவர்கள் அதிகாரி கையில் பட்ட அவஸ்தைகளும் பாடுகளும் அடங்கி யிருந் தன. அச்சமயம் அந்நகரில் வேத கலாபனையே இல்லா தது போல் எங்கும் அமைதியா யிருந்தது.

கடைசியில் மூன்றும் நாள் முடிவெய்தியது. தனது வாழ்க்கையின் இறுதி வந்ததென்று செசீலியா உணர்ந் தாள். சர்வேசுரனுடைய உன்னத சன்னிதானத்துக்கு முன் நிற்கவேண்டிய நேரம் வந்ததென் றறிந்தாள். அவள் இவ்வுலகைவிட்டுப் பரலோகம் போகும் பிரயாணத்துக் காயத்தஞ் செய்வதுபோல் யோக நித்திரையி லாழ்ந்தாள். அவள் வலது பாரிசமாய்த் திரும்பி தனது பாதங்களை ஒன்றுக்ச் சேர்த்து முழங்கால்களைக் கொஞ்ச மடக்கிக் கொண்டாள். பின்னர் தனது கரங்களைச் சேர்த்துக் கும் பிட்டவண்ணம், அக்கால வழக்கத்தின்படி தமதிரித்துவத் தின் மூன்றுட்களின் அடையாளமாக வலது கரத்தின் மூன்று விரல்களையும், சர்வேசுரனுடைய ஏகத்துவத்தைக் குறிக்கு மடையாளமாய் வலது கரத்தின் ஆள்காட்டி விரலை யும் நீட்டிக்கொண்டாள். கடைசியில் மனிதர் பார்வையை விட்டுத் தனது நேசருடைய சன்னிதானத்தில் பிரவேசிப் பதுபோல், உடலைவிட்டுப் பிரியும் ஆத்துமாவின் அந்த ரங்க சல்லாபங்களை ஒருவரும் நோக்காதிருக்கும் பொருட்டு, அம்மாதரசி தனது முகத்தைக் குப்புறவைத்துக்கொண் டாள். இந்த நிலையில் அவள் உயிர்விட்டாள்.

அப்போது அங்கே இருந்தவர்கள் அவள் மரணத் தின் போதிருந்த நிலையை மாற்றத் துணியவில்லை. கொலை

ஞன் அவளைக் கொலைசெய்ய வந்தபோது அவள் அணிந்திருந்த பீதாம்பரத்தோடே, அவள் சாகுமுன் இருந்த நிலையில் யாதொரு மாற்றமுமின்றி அவள் சரீரத்தை ஆசலழியாமல் அப்படியே தூக்கி சைப்பிரஸ் மரத்தாலாய பெட்டி ஒன்றில் வைத்தனர். அவள் காயத்தினின்றும் வடிந்த இரத்தந் தோய்ந்த வஸ்திரத்தை அவள் பாதத்தண்டை வைத்தனர். மறுநாளிரவு பாப்பனவரே வந்து அவள் சரீரத்தைக் கொண்டுபோய் பிரிட்டெக்ஸ்தாத்தூஸ் என்னும் நாமம்கொண்ட சுரங்கத்தில், அவளால் புதைக்கப்பட்ட வலேரியான், திபூர்சியஸ், மாக்சிமஸ் என்னு மூவருடைய கல்லறைகளுக் கருகில் வெகு பூசிதமாய் பூமிதானஞ்செய்தார். அவளுடைய கடைசி வேண்டுகோளுக்கிணங்க அவளுடைய மாளிகையைக் கோயிலாக மாற்றிவிட்டனர். அக்கோயில் இன்னும் அவள் நாமம்பூண்டு விளங்குகிறது. அவள் மரண மடைந்த கொஞ்ச நாளைக்கெல்லாம், உர்பானுஸ் என்னும் பாப்பானவரும் வேதவிரோதிகள் கையில் சிக்கி வேதசாட்சியாக மரித்து, ஆர்ச். செசீலியம்மாள் கல்லறைக் கருகிலேயே அடக்கம் பண்ணப்பட்டார்.

---

## அதிகாரம்—8

---

### அழியாத் திருமேனி

*அடியார்கள் திருமேனி யழியாமற் புவிமீதில்*
*கடியாத விதுவாதி கனயோக வுளமேயாம்.*

இது காறும் நாம் கூறிவந்த சம்பவங்கள் நிகழ்ந்து அறுநூறு வருஷங்களுக்கு மேலாயிற்று. கிறீஸ்துநாதர் ஸ்தாபித்த சத்திய திருச்சபை விக்கிரகாராதனையின்மேல்

வெற்றிகொண்டு குன்றின்மே லிட்ட விளக்கைப் போல் பிர காசித்தது. பாஸ்கால் என்னும் பாப்பரசர் ரோமா புரியில் நிம்மதியாய் ஆண்டுகொண் டிருந்தார். அவருக்கு அர்ச். செசிலியம்மாள் பேரில் பக்தி யதிகம். எண்ணூற்றிருபத் தோரா மாண்டில் ஒருநாள் அவர் அந்தப் புண்ணியவதியின் பேர்கொண்ட தேவாலயத்தில் ஜெபித்துக் கொண்டிருந் தார். அப்போது அக்கோவில் கட்டடம் மிகவும் பழுதா யிருப்பதைக் கவனித்து, அதைப் புதுப்பித்துக் கட்ட வேண்டுமெனத் தீர்மானங் கொண்டார். உடனே வேலைக் காரரைவிட்டு அதனைப் பழுது பார்க்கும்படிச் செய்தார். அக்கோயில் ரோமையர் காலத்தில் ஒரு பிரபுவின் மாளி கையா யிருந்தபோது எவ்வளவு அலங்கார ஜோடினைகள் நிறைந்ததா யிருந்ததோ, அதைக் காட்டிலும் பதின் மடங்கு அழகாகவும் அலங்காரமாகவும் இருக்கும்படி அதனைப் புதுப் பித்துக் கட்டுவித்தார். அவ்வாறு அக்கோவிலை மிகவும் அலங்காரமாய்க் கட்டி முடித்த பின்னர், அதன் பேர் கொண்ட அர்ச்சியசிஷ்டமாதின் அடையாளமாக யாதொரு பூசித பண்டமும் அங்கே இல்லாதிருத்தல் அக்கோவிலுக் கோர் பெருங்குறை என நினைத்தார். பிரிட்டெக் ஸ்தாத் தூஸ் என்னுஞ் சுரங்கத்திலே அர்ச். வலேரியான், அர்ச். திபூர்சியஸ், அர்ச். மாக்கிமஸ் என்னும் வேத சாட்சிகள் கல்லறைகளுக் கருகிலேயே அர்ச். செசிலியம்மாளையும் புதைத்தார்கள் என் றறிந்தவரானபடியால், அந்தப் பாப்பா ணவர் அப் பெண்மணியின் கல்லறையைத் தேடிப் பார்க் கும்படி ஏற்பாடு செய்தார். ஆனால் அதற்காக அவர் எடுத் துக் கொண்ட பிரயாசை யெல்லாம் வியர்த்தமாயிற்று. அக் கன்னியரைப் புதைத்த இடம் அகப்படவே யில்லை. லம்பார்டியர் என்னும் ஜாதியார் அவள் சரீரத்தைக் கொண்டு போய் விட்டனர் என்னும் பொதுஜன வதந்தியொன்று

அக்காலத்தி லிருந்தபடியால், அவ்வதந்தி யுண்மையா யிருப்பினும் இருக்கலாம் என்று எண்ணி, பாஸ்கால் மாதவர் அவள் கல்லறையைத் தேடுவதை விட்டுவிட இருந் தார். ஆயினும் ஒருநாள் அவர் அர்ச். இராயப்பர் தேவா லயத்தில் ஜெபத்தியானத்தி லிருக்கையில், அவருக் கேதோ நித்திரை வந்ததுபோ லிருந்தது. அப்போது திடீரென அந்தக் கன்னி மகிமை குன்றாத வேதசாட்சி அவர்முன் பிர சன்னமாகித் தன்னைக் கொண்டாடும் பொருட்டு அவர் எடுத் துக் கொள்ளும் பிரயாசைக்காக அவருக்கு வந்தன மளிப்ப தாகவும் அவள் சரீரம் அடக்கஞ் செய்யப்பட் டிருக்கும் இடத்தருகில் அவர் பல தடவைகள்போ யிருப்பதாகவும், அவர் மீண்டு முயற்சி செய்தால் கல்லறையைக் கண்டு பிடிக்கலா மென்றும் அவருக்குத் தெரிவித்து மறைந்தாள். இந்த அற்புதக் காட்சியால் ஏவப்பட்டுப் பாஸ்கால் முனி வர் மீண்டும் அக் கல்லறையைத் தேட ஆரம்பித்தார். இந் தத் தடவை அவர் முயற்சி பல னளித்தது. அர்ச். செசிலி யம்மாளின் சரீரத்தை வைத்திருந்த சைப்பிரஸ் பெட்டி யகப்பட்டது. அதைத் திறந்து பார்க்கையில் அந்த அர்ச் சிய சிஷ்ட மாது மரணிக்கும்போது என்ன நிலைமையிலிருந் தாளோ, அதே நிலைமையில் ஆச லழியாமல் அவள் சரீரம் ஒருகளித்துத் தலையைக் குப்புறவைத்த வண்ணம் இருந் தது. அவள் இன்னும் சர்வேசுரனோடு அந்தரங்க சல்லா பம் செய்துகொண் டிருக்கின்றனளோ என்றையுற இட மிருந்தது! அவளுடைய இரத்தத் துளிகளால் கறைபட்ட விலையுயர்ந்த பட்டுப் பீதாம்பரம் அழிவுறாமல் அப்படியே இருந்தது. அவளுடைய கழுத்துக் காயத்தினின்றும் வடிந்த இரத்தத்தைத் துடைத்த வெள்ளை வஸ்திரம் அவள் பாதத் தண்டை வைக்கப்பட் டிருந்தது. அங்கே அவள் நித்திரை புரிவதுபோல் அழகாகப் படுத்துக்கொண் டிருந்தாள்.

காலம், மரணம் என்னும் பகைவரின் கரங்கள் அவள் சரீரத்தில் படவேயில்லை. நமதாண்டவர் தம தடியாளும் நேசப் பத்தினியுமாகிய அப் பெண்மணியின்மீது வைத்த அளவு கடந்த அன்பின் அறிகுறியாக அழிந்து போகும் அவள் சரீரத்தையும் அழியாமல் காப்பாற்றி வரச் சித்தமானார்! ஆ, என்னே கடவுளின் கருணை! அச் சமயத்தில் அங்கே நின்றவரெல்லாம் அந்த அதிசயத்தைப் பார்த்துக் கொண்டு மௌனமாய் நின்றனர். "அவளுக்குப் பிரியமிருக்கும் வரையில் எனது பிரியைத் தூங்கட்டும். அவளை நித்திரையினின்று எழுப்பாதீர்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று நமதாண்டவர் சொல்வது அவர்களுடைய செவியில் விழுவது போலிருந்தது. இந்தக் காட்சியைக் கண்டதும் பாஸ்கால் என்னும் பாப்பரசருக் குண்டான ஆனந்த அக மகிழ்ச்சிக் களவே யில்லையாம். அவர் சவப்பெட்டியை மெதுவாகக் குழியினின்றும் எடுப்பித்தார். நமதாண்டவ ரன்பின் முத்திரை விளங்கும் அந்தத்திருச் சரீரத்தை யசைக்கவோ அல்லது தொடவோ அவர் துணியவில்லை யாதலால், அதை மெல்லிய பட்டு வஸ்திரத்தால் மூடியதுமன்றி, பெட்டியின் உட்பாகத்தில் விலையுயர்ந்த தமாஸ்க் துணியை வைத்துப் பொதிந்து அவருக்கு அந்த அம்மாள் பேரிலிருந்த பக்தி வணக்கத்தைக் காட்டினார். மற்றபடி சரீரம் அப்பெட்டியில் ஆதியி லிருந்தவாறே இருக்கும்படி விடப்பட்டது. கடைசியாக அந்தப் பரிசுத்த மாதின் பேர்கொண்ட கோவிலில் நடுப்பீடத்தி னடியிற் சலவைக் கற்களால் அலங்காரமாய்க் கட்டப்பெற்ற அழகிய பெட்டகத்தில் அந்தத் திருச்சரீரம் வெகு பூசிதமாய் ஸ்தாபிக்கப்பட்டது. அந்தப் பாப்பானவரே செசீலியம்மாள் காலத்தில் வேத சாட்சி முடிபெற்றவர்களில் அர்ச். வலேரியான், அர்ச். திபூர்சியஸ், அர்ச். மாக்சிமஸ், அர்ச். ஊர்பானுஸ், அர்ச். லூசியஸ் என்னும்

இந்தப் பரிசுத்தவான்களுடைய சரீரங்களையும் அவர்களுடைய கல்லறைகளிலிருந்து அப்புறப்படுத்தி அந்தக் கோவிலிலேயே பிரத்தியேகமான இடத்தில் சலவைக்கல் கல்லறையில் ஸ்தாபகஞ் செய்தார். கடைசியில் சொல்லப் பட்ட அர்ச். லூசியஸ் அதே நூற்றாண்டில் வேதத்துக்காக உயிரைக் கொடுத்த மற்றொரு பாப்பானவர்.

காலங் கழிந்தது. சுமார் எட்டு நூற்றாண்டுகள் கடந்தன. நாகரீக நாடுகளில் ஆட்சி புரிந்து வந்தது போலிருந்த சத்திய திருச்சபையானது அதன் அஸ்திவாரமே தகர்ந்துவிடும்போல் அவ்வளவு பெரிய பிரசண்டமாருதத்தால் தாக்குண்டு தள்ளாட நேர்ந்தது. வேதத்துக்கு விரோதமாக புரோட்டஸ்டாண்டு பிரிவினை கிளம்பிற்று. தேவனுக்குப் பிரியமாக அர்ச்சியசிஷ்டவர்களைக் குறித்து அவமதித்துப் பேச அஞ்சாத மாந்தர் எழுந்தனர். இந்த அவிசுவாசத்தையும் பிரிவினையையுந் தாக்க அர்ச். இஞ்ஞாசியாரும், அர்ச். பிலிப்பு நேரியாரும் கிளம்பினர். அவர்கள் மரணமடைந்த பின்னர், திருச்சபையின் தெய்வீக இயக்கத்தையறியாதார் அதற்குக் கெட்ட காலம் பிறந்துவிட்டதென்றும், அர்ச்சியசிஷ்டவர்களின் புண்ணியங்கள் மனிதரின் ஞாபகத்தினின்றும் அடியோடு விலகிவிடுமென்றும் நினைத்திருக்கலாம். இந்தச் சமயத்தில்தான் அர்ச். செசீலியம்மாள் மீண்டுந் தனது கல்லறையினின்று மெழுந்து, அர்ச்சியசிஷ்டவர்களின் புண்ணியங்களையும் மகிமைகளையும் கல்லறையின் மௌனத்தால் அழுத்தந் திருந்தமாக உலகறிய எடுத்துரைக்கவேண்டியிருந்தது.

இக்காலத்தில் ரோமையில் எமீலியஸ் போன்றதே சின்னப்பர் என்னும் கருதினல் ஒருவர் இருந்தார். அவர் பாஸ்கால் என்னும் பாப்பானவரைப்போல அர்ச். செசீலி

# ஜெயசீலி

அல்லது

## கன்னியர் பொக்கிஷம்

(மிஸ்டர். ஏ. டேவிட் (A. DAVID) எழுதியது.) பெரியோர்களேயன்றிச் சிறுவரும், சிறுமிகளும் தாராளமாய் வாசித்து நன்மையடையக்கூடிய அருமையான இனிய செந்தமிழ் நாவல். படிக்கப் படிக்கப் பாலுந் தேனும் பருகுவதே போல் தித்திக்கும் தீஞ்சுவை பொருந்தியது. எடுத்தபிறகு வைக்க வொட்டாமல் இடையறாது இன்பமூட்டுவது. நாவல்மேல் வெறுப்புள்ளவர்களையும் விருப்புறச் செய்யும் அபூர்வ சக்தி வாய்ந்தது. கதா நாயகியாகிய ஜெயசீலி என்பவள் தன் பிறப்பு வளர்ப்பு தெரியாமல் கலங்கி கஷ்டம் அனுபவித்தல்; ஒரு பிராமணக் குடும்பத்தை சத்திய மறையிற் சேர்த்தல்; பின் அக் குடும்பத்திலேயே தான் பிறந்தவளென்று கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்து சோக்கமுறுதல்; தன் தாயையும், சகோதரியையும், சகோதரனையும் மனந் திருப்பிய பின்னர், உலகத்தை வெறுத்துக் கன்னியர் மடம் பிரவேசித்தல் முதலிய விஷயங்கள் இனிமையாக விளக்கி வரையப்பட்டிருக்கின்றன. இதில் இரண்டு அழகிய ஆப்டோன் படங்கள் அடங்கியுள்ளன. விலை அணு 6.

## சுசீலா அல்லது கபாலமலைக் கள்வர்

ஸ்ரீமான் ச. செல்வராஜு ரெட்டியார், பி. ஏ., எல். டி., அவர்கள் இயற்றியது. கபாலமலையின்மீது நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்து நாதருக்கு இருபுறத்திலும் சிலுவையில் அறையுண்டு மரித்த "நல்ல கள்ளன்," "கெட்ட கள்ளன்" எனப்படும் இரண்டு கள்வர்களின் சரிதை. இதுவரையிலும் வெளிவராதது. மெத்த அருமையானது. பக்திரசம் பொருந்தியது. கத்தோலிக்கர்கள் ஒவ்வொருவரும் வாசித்தறியவேண்டிய உத்தம பக்திக்குரிய புத்தகம். வீண் கதையல்ல, நாவல் அல்ல. ஞான நன்மைக்குரிய சரிதை; நாவல் ரூபமாக எழுதப்பட்டுள்ளது. படிப்பதற்கு மெத்த உருசிகரமாயிருக்கும். விலை அணு 6. தபாற்கூலி வேறு.

---

செல்வம் அண்டு கம்பெனி, பரங்கிமலை.


28S89

# "சத்தியநேசன்"

## ஓர் அரிய மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

இஃது பொதுவாகக் கிறீஸ்துவர்களுடையவும், சிறப்பாகக் கத்தோலிக்கருடையவும் லௌகீகப் பிரயோசனத்திற்காகப் பிரசுரிக்கப்படுவது. தமிழ்க் கிறீஸ்துவர்களின் பொது அறிவு வளர்ச்சியிலும், பாஷாபி விர்த்தியிலும், வேதாபிவிருத்தியிலும், சுருக்கிச் சொல்லுமிடத்து கிறீஸ்துவர்களின் முன்னேற்றத்துக்கான சகலத்திலும் ஈடுபட்டுழைக்க முன்வந்துள்ளது. கிறீஸ்துவர்கள் ஒவ்வொருவரும் வாங்கி பிரயோஜனத்துடன் வாசிக்கப்படத்தக்கது. அவர்களுக்குப் பிரதிபலன் அளிக்கும் ஆற்றலுள்ளது.

இப்பத்திரிகையின் மாதிரிப் பிரதி வேண்டுவோருக்கு இனாமாக அனுப்பப்படும்.

வருஷசந்தா தபாற்கூலி உட்பட

1. இந்தியா, பர்மா, இலங்கையாதிய உள்நாடுகளுக்கு } ரூ. 1-0-0
2. பினாங்கு, சிங்கப்பூர், பசரா நெட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு } ரூ. 1-4-0

## எமது சொந்தப் பிரசுரங்கள்

| | ரூ. அ. | | ரூ. அ. |
|---|---|---|---|
| சோம சுந்தரம் | 1—0 | ஞானானந்தன் | 0–11 |
| வேதானந்தம் | 1—0 | தனபாக்கியம் | 0–10 |
| பாலசுந்தரம் | 1—0 | சுசீலா | 0—6 |
| சத்திய நாதன் | 1—0 | ஜெயசீலி | 0—6 |
| அர்ச். தோமையார் | 1—0 | வெரோனிக்கா | 0—6 |
| அர்ச். அந். சரித்திரம் | 1—0 | அருள்மரி | 0—6 |
| ஆனந்தராயன் | 1—0 | செல்வியர் நியதி | 0—4 |
| மதிவீரன் | 0–14 | | |

விலாசம்:—செல்வம் அண்டு கம்பெனி,

480, சில்வர் தெரு, பரங்கிமலை.

**Saint Thomas' Mount.**